விலை ரூபா 2–00 12 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 29 ஆனி 28 துல்ஹஜ்ஜா 15 இதழ் 141

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 12-7-87

குடாநாட்டு ஆஸ்பத்திரிகளுக்கு

## இந்திய மருந்துகள் விநியோகம்

[அலுவலக நிருபர்]

இராணுவ நடவடிக்கைகளினுல் உள, உடல் ரீதியாகப் பாதிக்கப்பட்ட யாழ். குடா நாட்டு மக்களைப் பாதுகாக்கும் வகையில் இந்திய மத்திய அரசினுல் அனுப்பி வைக்கப்பட்ட மருந்துவகைகள் யாழ் குடா நாட்டிலுள்ள ஆஸ்பத்திரிகளுக்கு யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தினுல் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

அத்தியாவசிய மருந்துவகை எண்பது வீதமானவைகளில் யாழ் போதனு வைத்தியசாலை, தெல்லிப்பழை, மந்திகை அரசினர் வைத்தியசாலைகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

இந்த மருந்துவகைகள், ஊர்காவற்றுறை, சாவகச்சேரி, கிளிநொச்சி ஆஸ்பத்திரிகளுக்கும், மத்திய மருந்தகங்களுக்கும் கிராமப்புறத்தில் (11-ம் பக்கம் பார்க்க)

## இந்திய முதற்கட்ட நிவாரணப் பொருள்களை 78 முகாம்களிலிருந்த 65,000பேர் பெற்றனர்

[எம். வாமதேவன்]

இந்திய அரசினுல் கப்பல்மூலம் அனுப்பி வைக்கப்பட்ட முதற்கட்ட நிவாரணப் பொருள்கள் யாழ். குடாநாட்டில் தென்மராட்சி தவிர்ந்த சுமார் 78 அகதிகள் முகாம்களிலுள்ள மக்களுக்கு வழங்கப்பட்டது.

யாழ் குடாநாட்டில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினல் தம் சொந்த இடங்களிலிருந்து உடமைகளை இழந்த நிலையில் முகாம்களில் பட்டினிச்சாவை எதிர்நோக்கியிருந்த 10,300 குடும்பங்களைச் சேர்ந்த 65 ஆயிரம் மக்களுக்கே இந்த நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன.

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவில் [11-ம் பக்கம் பார்க்க]

# பரு. ஹாட்லிகல்லூரியிலிருந்து இராணுவம் வாபஸ்பெறும்?

(நமது நிருபர்)

**பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியிலிருக்கும் இராணுவத்தை வாபஸ் பெற்று, சேதமுற்றுள்ள கல்லூரிக் கட்டிடங்களைச் செப்பனிட்டு மீண்டும் அங்கு மாணவர்களின் கல்விப்பணிகளைத் தொடர நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அறியப்படுகின்றது.**

இவ்விடயம் குறித்து கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை நடத்தி வருகிருர்.

அண்மையில் கல்வி அமைச்சரை கொழும்பில் சந்தித்துப் பேசிய வடமாகாண கல்லூரி அதிபர்கள் சங்கப்பிரதிநிதிகளிடம் இத்தகவலை அமைச்சர் தெரிவித்திருப்பதாகத் தெரியவருகின்றது.

இராணுவத்தின் துப்பாக்கி வேட்டுக்கு இலக்காகி ஆஸ்பத்திரியில் மரணமான வீமன்காமம் மகாவித்தியாலய அதிபர் திரு. மு. சிவராசாவின் மரணத்துக்குஏதுவானகாரணிகளை ஆராய்வதற்கும் உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அமைச்சர் ஒப்புக்கொண்டிருப்பதாகத் தெரிகின்றது.

ஜி சி ஈ. உயர்தரம் பரீட்சை எடுக்கும் வடமராட்சி (11ம் பக்கம் பார்க்க)

## 'ஐலன்ட்பிரைட்'டுக்கு அனுமதி வழங்கப்பட்டது

### பூரி கொழும்பு திரும்பினுர்

யாழ்ப்பாணப், ஞாயிறு யாழ்ப்பாணம் வந்திருந்த இந்திய தூதரகச் செயலர் திரு. எச். எஸ் பூரி நேற்று விமானமூலம் கொழும்புக்குத் திரும்பினுர்.

இந்திய நிவாரணப் பொருள்களுடன் இரண்டாவது தடவையாகக் காங்கேசன்துறை இராணுவத் துறைமுகத்திற்கு அப்பால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த "ஐலன்ட் பிரைட்" கப்பலிலிருந்து உணவுப் பொருள்களை இறக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து முடித்தபின்னரே திரு. பூரி கொழும்பு திரும்பியதாகத் தெரியவருகிறது.

கடந்த வியாழக்கிழமை காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வந்திருந்த இந்த (11ம் பக்கம் பார்க்க)

பல்கலைக்கழகங்களில் அமைதியில்லை யென்றுல்

## உடனே மூடப்படும்

அமைச்சரவை தீர்மானம்

[நமது நிருபர்]

பல்கலைக்கழகங்களில் அமைதியின்மை தோன்றும் எந்தச் சந்தர்ப்பத்திலும் பல்கலைக்கழகங்களை மூடிவிடுவதென அரசு முடிவுசெய்துள்ளது. பல்கலைக்கழகங்களில் அடிக்கடி அமைதிக்குப் பங்கம் ஏற்படும்விதத்தில் சம்பவங்கள் நடைபெற்று வருவதனுல் இந்த முடிவை அரசு எடுத்திருப்பதாகத் தெரியவருகின்றது.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பல்கலைக்கழகங்களில் இருந்துவரும் நிலைமைகள் குறித்து ஆராயப்பட்டது.

பல்கலைக்கழக மாணவர்கள் (11ம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவு உதவி அரச அதிபர் துப்பாக்கிச்சூட்டில் காயம்

யாழ்ப்பாணம், ஞாயிறு புலோலியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் சந்திரசேகரம் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுப் புலோலியிலுள்ள தனது வீட்டிலிருந்து சைக்கிளில் வெளியேவந்து புலோலி பிரதான வீதியில் சென்று கொண்டிருந்தபோது உதவி அரசாங்க அதிபரை நோக்கி இராணுவத்தினர் சுட்டதாகக் கூறப்படுகிறது.

இதனுல் தனது காலில் காயமடைந்த அவர் மந்திகை அரசினர் அஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகிருர். [ஓ]

வாடிக்கையாளர்களுக்கு

ஓர் நற்செய்தி

குறைக்கப்பட்ட விலையில் காஸ் அடுப்பு, (Gas Cooker), L. P Gas தாராளமாக விற்பனைக்கு வந்துள்ளன. உங்கள் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள்.

முகமதலி அப்துலலி

5–7, பெரியகடை,

யாழ்ப்பாணம்.

கிளை:

351,(589), நாவலர் வீதி,
(கைலாச பிள்ளையார் கோவில் சந்தி)
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

குறிப்பு : வெல்டிங் காஸ் (Welding Gas) விற்பனைக்குண்டு. [சி 9800]

## வடக்கில் 2 மாதத்திற்குள் தீவிரவாதத்திற்கு முடிவு!

### பந்தயம்பிடிக்கவும் அமைச்சர்காமினி தயார்

(நமது நிருபர்)

வடக்கில் இன்று நிலவும் தீவிரவாத போராட்டங்களுக்கு இன்னும் இரண்டு மாதங்களில் ஒரு முடிவு ஏற்பட்டுவிடும் என்றும் இது குறித்து பந்தயம் பிடிக்கவும் தயாராய் இருப்பதாகவும் காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினிதிசநாயக்க கூறியுள்ளார்.

அண்மையில் கம்பஹாவில் பௌத்த கல்லூரிக்கட்டிடமொன்றினை திறந்து வைத்துப் பேசுகையில் அமைச்சர் இவ்வாறு கூறினுர்.

கடந்த ஆண்டு ஆகாய விமானங்களைப் பாதுகாப்பதற்காக செலவிடப்பட்ட பணத் (11ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

டிசம்பரில் சனிமாற்றம். ஜோஸ்பரின் சனிமாற்றப் பலன்கள் வெளிவந்துள்ளன. அதிக பக்கங்கள், மூவர்ண அட்டை. மூன்று ரூபா தபால் தலை அனுப்பினால் முகவரிக்கு அனுப்பப்படும். ஐயா சச்சிதானந்தன், 12, விதானையார்வீதி, யாழ்ப்பாணம். சி-9708

சிங்கர் Zig Zag தையல் மெஷின் தமிழ் தட்டச்சு யந்திரம் உடன் விற்பனைக்குண்டு 326 பிரதான வீதி, யாழ்ப்பாணம். சி-9763

சகல விதமான திருமணப் பட்டுப் பிடவைகளுக்கும், றெடிமேட் ஆடைகளுக்கும், நம்பிக்கையான ஸ்தாபனம் கணேசன் ஸ்ரோர்ஸ், இல 11, கஸ்தூரியார் லேன், [கன்னாதிட்டிக்கு அருகாமையில்] யாழ்ப்பாணம். ஏ-1904

நல்லநிலையில் உள்ள Honda 200 Bentley மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைகுண்டு. [உரிமையாளர் வெளிநாடு செல்வதால்] தொடர்பு கொள்ளவும்: பாலேந்திரக்குமார்/அன்ரன், அரசடி வீதி, பண்டத்தரிப்பு. சி-9792

ஒகஸ்ட் 16-ம் திகதி நடைபெறவிருக்கும் உதவி ஆசிரியர் தெரிவு போட்டிப் பரீட்சைக்குரிய வழிகாட்டி. "பொதுஅறிவு பொதுஉளச்சார்பு" புதிய பதிப்பு 1984, 87 ஆண்டு வினா விடைத்தாள்களையும் உள்ளடக்கியது. விலை ரூபா 49-50, பூபாலசிங்கம்புத்தகசாலை, சிறிலங்கா புத்தகசாலை, சுப்பிரமணியம் புத்தகசாலை யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பெற்றுக் கொள்ளலாம். மொத்தமாகப் பெறவிரும்பின் அஸ்ரன்இன்ஸ்ரிரியூட் 101/10 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். சி-9554

Nallur Farm Centre எல்லா வகையான கோழித்தீன்கள், அரைத்தசோயா, தரமான பிண்ணாக்கு, மீன்தூள், மருந்துவகைகள், உபகரணங்கள், தரமானமுட்டைமற்றும் நாய்களுக்கும் வளர்ப்பு மீன்களுக்கும் குருவிகளுக்கும் ஏற்ற சாப்பாடுவகைகள், மருந்துகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். C/o நல்லூர் வீடியோ சென்டர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். சி-9682

சகலவிதமான பாவித்த வீட்டுத் தளபாடங்கள் தேக்கு கட்டில், சோகேஸ், மெத்தைகள், அல்மாரி, தையல்மெஷின், கசற் றேடியோ, பித்தளைப் பொருள்கள், சாப்பாட்டு மேசை, Rice Cooker, ஹோல் செற், Office மேசை, Dressing Table சாதாரண மேசைகள் மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. 326 பிரதான வீதி, யாழ்ப்பாணம். [சி-9764]

## விற்பனைக்கு

பான்சி குட்ஸ் சீமாட்டி 158, நவீனசந்தை யாழ்ப்பாணம் [சி 9750]

பிடவை சீமாட்டி 531. பலாலி றோட், திருநெல்வேலி, யாழ். பல்கலைக்கழக அருகாமையில் [சி9751]

எங்களிடம் சுத்தமான உழுத்தம் மா எந்நேரமும் விற்பனைக்குண்டு. Trufood Grinders, 580, Hospital Road, Jaffna. (ஆஸ்பத்திரிக்கு முன்பாக). சு-9772

பியானோ, சொனிஸ் பீக்கர் பொக்ஸ் உடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு 47, விதானையார்வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். சி-9762

நல்ல இன புறொய்லர்ஸ், லவ் பேட்ஸ் முட்டை விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும்: அண்ணா பாம், மொஸ்க் லேன், இணுவில், யாழ்ப்பாணம். [எ 1910]

எல்லா அளவுகளிலும் என்பலப் செய்யக்கூடிய கட்டர்கள், வெல்டிங் ரான்ஸ்போமர், றில்லர் ஸ்ராண்ருடன், மற்றும் பல உபகரணங்களும் விற்பனைக்குண்டு மேரிஸ் வெல்டேர்ஸ் ச.வி. ஜெயரத்தினம், சில்லாலை, பண்டத்தரிப்பு. [சி-9802]

நாஷனல் வீடியோ டெக் [300, 370, 7000, 2000, 7200] இற்குரிய IC கள், சகல மெக்கானிக்கல் உதிரிப்பாகங்கள், சகல அளவுள்ள ரெலிவிசன் ரியூப், ரியூனர், Fly Back என்பன விற்பனைக்குண்டு Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி [றெயில்வே கடவைக்கருகாமை], யாழ்ப்பாணம். சி-9796]

கசியோ யப்பான் மொடல் 262 D B.510 G-5, Telememo 50 (50 Sets of 6 letters and 12 numerals) 5-Daily Alarming, Hourly timing signals, Countdown Alarm, Micro light-வாச் TG/Ti ion (Gold) Plating-பாவிக்காத புதியது. தொடர்பு; புலேந்திரன், குட்லக் பார்மசி [O. P. D. -ஆஸ்பத்திரி முன்பாக), யாழ்ப்பாணம். [சி-9803]

## தவறிவிட்டது

இல. 481122643V தம்பிஐயா இராசரட்ணம் டச்றோட் 'அந்திரான்' சண்டிலிப்பாய் என்பவருடைய அடையாள அட்டை நாவாந்துறை பொதுச்சந்தைக்கும் ஆனைக்கோட்டைச் சந்திக்குமிடையில் சைக்கிளில் பிரயாணம் செய்யும்போது தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் மேல் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படுப். [சி-9793]

## இடமாற்றம்

தற்போதைய சூழ்நிலை காரணமாக வாடிக்கையாளர்கள் ஆதரவாளர்கள் அன்பர்கள் ஆகியோரின் தற்பாதுகாப்புக் கருதி எமது ஸ்தாபனத்தை 10--7-87 முதல் இடமாற்றம் செய்துள்ளோம்.

புதிய இடம்

# பெஷன் ஹவுஸ்

571, கே. கே. எஸ், வீதி,
யாழ்ப்பாணம்.

(மனோகரா தியேட்டர் - நாவலர் வித்தியாலயத்திற்கு அருகில்) [ஏ 1905]

## கல்வி

Graduate Teachers Training மூன்றுவருட பட்டதாரி ஆசிரியர் பயிற்சி [வெளிவாரி பல்கலைக்கழக சான்றிதழும் கல்வித் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழும் வழங்கப்படும்]. தகைமைகள்: க. பொ. த. [உயர்தரம்] 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம் மேலதிகவிபரங்களுக்கு காரியாலயத்துடன் 31-07-87 இற்கு முன் தொடர்பு கொள்ளவும் அதிபர், உயர் கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். சி-9769

## தேவை

அனுபவம் உள்ள வானொலிப் பெட்டிகள் பழுது பார்க்கும் தொழில்நுட்ப வல்லுநர்கள் [Technicians] தேவை இவர்கள் காலை 9-00 மணி முதல் 12-00 மணி வரைக்குள் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். "ரெலிக் கோணர்", நவீன சந்தை. சாவகச்சேரி. (சி—9765)

தையல்வேலைக்கு அனுபவமுள்ள பெண்கள் தேவை, தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: ருடோ காட்சியறை, [Rado Show-Room] 331, பிரதானவீதி, யாழ்ப்பாணம். [சி 9797]

யாழ் நகரில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனத்திற்கு ஆங்கில தட்டெழுத்து, சுருக்கெழுத்து பயிற்றுவிக்கும் ஆசிரியர் தேவை. 20-07-1987 க்குள் விண்ணப்பிக்கவும் முகவரி: செந்தூரன் ரேடிங் கொம்பனி, K. K. S வீதி, யாழ்ப்பாணம். [சி-9799]

## 31-ம் நாள் நினைவஞ்சலி



திருமதி
அடைக்கலம் ஜோசவ்
(இளைப்பாறிய ஆசிரியை மன்னார்)

தோற்றம்; 15-02-1915
மறைவு: 12-06-1987

அன்பினால் எம்மைக் காத்து
அறிவிலே உயர வைத்து
ஆனந்த வாழ்வு காட்டி
அமைதியாய்த் துயின்ற தாயே!
உன் நினைவிலே கலங்கி வாடி
உருகும் எம் நிலையைப் பாராய்!

உங்கள் ஆன்ம சாந்திக்காக இறைவனை வேண்டும்:

மகள்: நீற்று தேவசகாயம், மருமகன்: B. J. தேவசகாயம், பேரப்பிள்ளைகள்: றெவீனா, பிறயன், பொன்ராஜா.

இவரது ஆன்ம இளைப்பாற்றுக்காக மன்னார் புனித செபஸ்தியார் ஆலயத்தில் 12-07-87 அன்று துக்கறப்பாடற்பூசைஒப்புக் கொடுக்கப்படும். (சி-9757)

# "முழுமையான கல்வி அறிவுக்கு நூலகங்களின் பங்கும் அவசியம்"

## நூலக ஆண்டு விழாவில் பேராசிரியர்

(உடுவில்)

"பொதுநூலகங்கள், பள்ளிக் கூடங்களில் பூர்த்தியடையாத கடமையை பூர்த்தி செய்யஉதவுகின்றன. பல்கலைக் கழகங்களில் வழங்கப்படுகின்ற வாய்ப்புக்கள் முழுமை பெறவும், இவைஉதவுகின்றன. இந்நாட்டில் கல்விக்கு திறந்த பல்கலைக்கழகம், வெளிவாரிப்பட்டப்படிப்புகள் ஆகியவற்றுடன் பொது நூலகங்களும் இன்றியமையாத அம்சங்களாக விளங்குகின்றன".

இவ்வாறு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கல்வித்துறைப் பேராசிரியர் திரு. ப. சந்திரசேகரம் இணுவிலில் நடைபெற்ற வைபவமொன்றில் பேசுகையில் கூறினார்.

இணுவில் பொதுநூலகம்-சனசமூகநிலைய ஓராண்டுவிழாவில் திரு. சந்திரசேகரம் பிரதமஅதிதியாககலந்துகொண்டு உரையாற்றினார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. சபா. ஜெயராசா, தொழிலதிபர் திரு எஸ். பி. நடராசா ஆகியோர் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்துவைத்தனர்.

திரு. எஸ். சண்முகலிங்கம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

பேராசிரியர் திரு. சந்திரசேகரம் மேலும்பேசியதாவது:

ஒரு மாணவனுக்கு நூலகங்கள், பள்ளிக்கூடங்கள் கல்வி கற்கும் பொழுதும் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் பொழுதும், பின்னர் பல்கலைக்கழகங்களில் விரிவுரைகளுக்கு செல்லும் பொழுதும் தேவையாக உள்ளன. நூல்களை வாசிப்பது மனச்சாந்தியை அளிக்கின்றது நூல்களைப்படிக்கும் உரிமை ஒருவனின் பிறப்புரிமை. நூல்நிறுவனங்கள் சமத்துவம் அளிக்கும் நிலையங்கள் பழமையும் புதுமையும் இணைகின்ற நிறு

(10-ம் பக்கம் பார்க்க)

## மணப்பந்தல்

வெளிநாட்டில் நிரந்தரமாகத் தொழில்புரியும் மணமகன்களை திருமணம்செய்ய விரும்பும் மணப்பெண்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும். 337, பலாலிவீதி, பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். [சி-9794]

24 வயதுடைய நான்காம் வருட மருத்துவபீட மாணவனுக்கும், 25 வயதுடைய அரசாங்க உத்தியோகத்தருக்கும், 33 வயதுடைய அரசாங்க உத்தியோகத்தருக்கும் இந்து வேளாள குலத்தைச்சேர்ந்த மணமகள் தேவை. மணமகளின் பிறந்தநேரம், சாதகம், கல்வித்தகமை, சீதனம், குடும்ப மற்றும் முழுமையான விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விபரங்கள் அந்தரங்கமாகப் பேணப்படும். விளம்பர இல. 9790, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். [சி-9790]

## ஏலவிற்பனை

பாவிக்கப்பட்ட தட்டச்சு இயந்திரங்கள், மணிக்கூடுகள், குளிர்சாதனப் பெட்டிகள், சயிக்கிள்கள், தையல்மெஷின்கள், மேசை மின்விசிறிகள், மண்வெட்டிகள், றேடியோக்கள் இன்னும் பலவிதமான பொருள்கள் வெள்ளிக்கிழமை 17-07-87ம் திகதி காலை 9மணியிலிருந்து ஏல விற்பனையில் விற்பனைக்கு விடப்படும்.

மேற்படி பொருள்களைப்பார்வையிட விரும்பும் கொள்வனவாளர்கள் 15-07-87, 16-07-87 ஆகிய இருநாட்களிலும் காலை 8-30 மணி தொடக்கம் மாலை 4-00 மணிவரை கல்வித்திணைக்கள பண்டகசாலையில் பார்வையிடலாம்.

பொருள்களின் விலை 3ம் கூற்று முடிவடைந்தவுடன் முழுப்பணத்தையும் செலுத்தி பொருள்களைஅகற்றுதல்வேண்டும்.

எம் எம். மன்சூர்,
கல்விப் பணிப்பாளர்.
கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
01-07-87 சி-120

## 47-ம் நாள் நினைவஞ்சலி



மகாலிங்கம்
நீலாகாந்தன்
[யா/கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவர் தலைவன்]

ஆண்டவன் படைப்பு: 10-04-1968
அரக்கர் அழிப்பு: 27-05-1987

அன்புடனும் பண்புடனும் பழகிய எங்கள் நீலாகாந்தன் நீ அகால மரணம் அடைந்து இன்று 47 நாட்கள் ஆயினும் உன் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களைவிட்டு என்றும் நீங்காது. உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நண்பர்கள்,
[சி-9798]

# WALK IN INTERVIEW

We are looking for a Mechanical Engineer with Engineering Degree or equivalent for immediate engagement for our vast expanding Engineering Company.

Please call for an interview on 15th July 1987 at 9-30 a. m. in our Company office with all your certificates and documents.

Promoters Engineering Company always look for quality.

We say it and our customers confirm this.

PROMOTERS ENGINEERING COMPANY LTD.
844, Point Pedro Road, Nallur, Jaffna.
(A 1909)

## தென்னாபிரிக்காவில்

# ஆபிரிக்க சுதேசியர்களுக்கு

# வாக்களிக்க உரிமை

## புதிய அரசியல்சாசனம் வரையப்படும்

கார்டூம், ஜூலை 11 தென்னாபிரிக்காவின் எதிர்கால அரசியல் சாசன நடவடிக்கைகளில் தத்தமது கருத்துக்களைத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வாயிலாக வெளிப்படுத்துவதற்கு அந்நாட்டிலுள்ள சுமார் ஒரு கோடியே நாற்பது லட்சம் ஆபிரிக்க சுதேசிகளை அனுமதிப்பது என தென்னாபிரிக்க அரசு முடிவுசெய்துள்ளது.

குடிமக்களாகக் கருதப்படும் இந்த ஆபிரிக்கர்கள் தேர்தலில் வாக்களிப்பதற்கு வசதியாக சட்டம் ஒன்று வரையப்பட்டு வருவதாக தெரியவருகிறது.

இதேவேளை நாட்டின் எதிர்கால அரசியல் சாசனம் பற்றிய ஆலோசனைசபை ஒன்றினை தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அமைப்பார்கள்.

தேசிய அரச அமைப்பு ஒன்றுக்கு ஆபிரிக்க சுதேசியர்கள் வாக்களிப்பதற்கு அனுமதி அளிக்கப்படவுள்ளது இதுவே முதல்தடவையாகும்.

உலகச் செய்திகள்

## "ஆயுதப்போட்டியால்——

# மூன்றும் உலகநாடுகளின் பொருளாதாரம் நாசம்"

ஜெனிவா, ஜூலை 11

"நான்கு ஆசியர்களில் ஒருவர் பசியால் வாடுகிறார். பொருளாதார வளர்ச்சியடைந்த நாடுகளுடன் ஒப்பிடுகையில், ஆசிய-பசுபிக் பிராந்தியத்திலுள்ள வளரும் நாடுகளில் சிசு மரணம் 20 மடங்கு அதிகமாகும். ஒவ்வோராண்டும் 1.5 கோடி ஆசிய ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்கள், பசியாலும் நோயாலும் மடிகின்றனர்" என்று ஆசிய-பசுபிக் பிராந்தியத்திற்கான ஐ. நா. கமிஷன் அறிக்கைகள் கூறுகின்றன.

மேலும் ஆயுதப் போட்டியினால், மூன்றும் உலக நாடுகளின் பொருளாதாரம் நாசம் அடைகிறது. 1986ல் ஆயுத உற்பத்திக்காவும், ராணுவப் படையினரின் பராமரிப்புக்காகவும், உலகு எங்கணும் 90,000 கோடி டாலர்களுக்கு மேல் செலவிடப்பட்டுள்ளன என்று ஐ. நா. புள்ளி விபரம் கூறுகிறது.

இதே வேளையில், மூன்றும் உலக நாடுகளின் வளர்ச்சிக்காக அதிகாரபூர்வமாக வழங்கப்பெற்றுள்ள உதவித் தொகை 2,240 கோடி டாலர்களே என்றும், இது உலக நாடுகளின் வருடாந்த ராணுவச் செலவுகளுடன் ஒப்பிடுகையில் 97 சத விகிதம் குறைவு என்றும், புனரமைப்பு மற்றும் வளர்ச்சிக்கான சர்வதேச பாங்கு கூறுகிறது.

கடந்த பத்தாண்டுகளில், வளரும் நாடுகளில் ராணுவச் செலவுகளின் அளவும் வேகமும் இரு மடங்கு உயர்ந்துள்ளன. வளரும் நாடுகளின் வருடாந்த ராணுவச் செலவுகள் இப்போது 20,000 கோடி டாலர்களை எட்டிவிட்டன.

இதற்கிடையில் 1985ல் ஆசிய பசுபிக் பிராந்திய நாடுகளின் ராணுவச் செலவு, 56,000 கோடி டாலர்கள் என்றும், இது அனைத்து உலக நாடுகளின் ராணுவச் செலவுகளில் மூன்றில் இரண்டு பங்குக்கும் அதிகம் என்றும் லண்டனிலுள்ள சர்வதேச ராணுவத்துறை ஆய்வுக்கழகம் கூறுகிறது.

இது இல்வாறிருக்க ஆசிய-பசுபிக் பிராந்திய மக்களில் ஐந்தில் இரண்டு பங்கினர் உணவு, உடை, குடியிருப்பு மற்றும் மருத்துவ வசதிகளின்றி அல்லலற்படுகின்றனர்.

# அசாமில் வெள்ளப்பெருக்கு மீட்புப்பணியில் இராணுவம்!

புதுடில்லி, ஜூலை 11 அசாமில் தொடர்ந்து வெள்ளம் பெருக்கெடுத்தவண்ணமுள்ளது. இராணுவத்தினர் மீட்புப்பணியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

அசாம் மாநிலத்திலுள்ள சகல ஆறுகளிலிருந்தும் வெள்ளம் பாய்வதாக தெரிவிக்கப்பட்டது.

உத்தரபிரதேஷ், பீகார், மேற்குவங்காளம் ஆகிய மாநிலங்களில் சுங்கை, யமுனை, கோசி மற்றும் மகா நந்தா நதிகள் உட்பட பெரும்பாலான ஆறுகளிலும் மழை காரணமாக நீர்மட்டம் உயர்ந்து கொண்டே செல்கின்றது.

கோசி நதியின் வெள்ளப் பெருக்கு காரணமாக பீகாரில் எட்டுகிராமங்கள் நீரில்மூழ்கிப் போயுள்ளன.

## 8 சிப்பாய்கள் பலி

புதுடில்லி, ஜூலை 11

மணிப்பூர் சேனுதிபதி மாவட்டத்தில் அமைந்திருந்த படையினரின் முகாமொன்றினமீது நாகா கிளர்ச்சியாளர்கள் மேற்கொண்ட தாக்குதலில் எட்டு சிப்பாய்கள் பலியானார்கள். மேலும் நான்கு பேர் காயமடைந்தனர்.

கடந்த வியாழனன்று இரவு இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில் சுமார் 100 கிளர்ச்சியாளர்கள் தாக்குதலில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இவர்கள் பெருமளவு துப்பாக்கிகள் வெடிமருந்துகளையும் அபகரித்துச் சென்றனர்.

## மே 20 முதல்

# பத்தமேனியில்ராணுவத்தால் 24 பேர் கொல்லப்பட்டனர்

## பிரஜைகள்குழு ஊர்ஜிதம்

அச்சுவேலி, சனி

பத்தமேனிக் கிராமசேவையாளர் பிரிவில் கடந்த மே மாதம் 2ம் திகதி முதல் இடம்பெற்ற ராணுவ நடவடிக்கைகளால 24 பேர் கொல்லப்பட்டது பத்தமேனி இடைக்காடு பிரஜைகள் குழுவினால் ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு பெண் உட்பட இருவர் காணாமற்போயுள்ளனர்.

இது தொடர்பாக இப்பிரஜைகள் குழுவினால் விடுவிக்கப்பட்டுள்ள அறிக்கையில் இறந்த 6 பேர் விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மே மாதம் 20ம் திகதி இறந்தோர் விபரம்:-

இரத்தினம் சிவபாதம், இரத்தினம் இராசாத்தி, இரத்தினம் ஸ்ரீ, இரத்தினம் அம்மா (நால்வரும் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள்.) அ சிவலிங்கம், சின்னத்தம்பி, ஜெகதீசன், பாலுசெல்வன், முருகன்,சிவா, க. சுப்பிரமணியம், க சின்னப்பிள்ளை, ந. சின்னப்பிள்ளை, மு. செல்வராசா, மு. குலேந்திரன், (ஒரு சடலம் காணப்படவில்லை.)

மே 21ம் திகதி பலியானோர் விபரம்:-

இராசதுரை இந்துமதி, ஆறுமுகம் சிவசுப்பிரமணியம், வேலுச்சாமி, தம்பு மார்க்கண்டு ஆகியோர்.

ஜூன் மாதம் 6ம் திகதி பலியானோர் விபரம்;-

சின்னக்குட்டி சின்னத்தம்பி தவசி கந்தசாமி, எஸ். பொன்னையா, க. சீவரத்தினம் ஆகியோர். மற்றும் இரண்டு சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை.

தம்பையா வேலாயுதம், கதிரவேலு பாக்கியம் இருவர் பற்றிய தகவல் எதுவுமில்லை. (ஊ)

## இலங்கை அரசாங்கம்——

# தன் சொந்தநாட்டுமக்களான தமிழர்மீது போர்நடத்துகிறது

## சர்வதேச சட்டவல்லுனர் திருமதி மாக்கர் அம்மையார்

(வாஷிங்டன்)

வடக்கு இலங்கையில் வடமராட்சிப் பகுதியில் இலங்கை ஆயுதப் படைகள் நடத்திய பெரும் எடுப்பான தாக்குதல்களையும் அதையடுத்து இந்தியா, யாழ்.குடாநாட்டுக்கு நிவாரணப்பொருள்கள் அனுப்பத்தொடங்கியதையும்அடுத்து இலங்கை தேசியபந்தோபஸ்து அமைச்சர் திரு லலித்அத்துலத்முதலி பலநாடுகளில சுற்றுப் பிரயாணம்செய்து இனப்பிரச்னையில் இலங்கையின் நிலைப்பாடு குறித்து விளக்கம் அளித்து வந்தார். குறிப்பாக அமெரிக்காவில் பல இடங்களில் பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு அமெரிக்க மக்களுக்கு, இலங்கை தமிழ்ப் போராளிகளுக்கு எதிராக எடுத்து வந்துள்ள நடவடிக்கைகளை விளக்கினார்.

இதேவேளை அமெரிக்காவிலுள்ள மனித உரிமை காப்பாளர்கள் இலங்கையில் நடந்துள்ள மனித உரிமைமீறல்கள் பற்றி பல விடயங்களில் கூட்டங்களை நடத்தி அமெரிக்க மக்களுக்கு விளக்கம் அளித்துள்ளார்.

கடந்த மாத இறுதியில் வாஷிங்டனில் கப்பிட்டல்ஹில் என்ற இடத்தில் இடம்பெற்ற இப்படியான ஒரு கூட்டம் பற்றிய விபரம்இப்போது கிடைத்துள்ளது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டுபேசிய மனித உரிமைக் காப்பாளர்கள், அங்கவீன மக்களின் சர்வதேசியம் ஆகியவற்றின் பிரதிநிதிகளையும், சர்வதேசச் சட்ட வல்லுநருமான திருமதி காரன்பார்க்கா அம்மையார் இலங்கை, பாகிஸ்தான், அமெரிக்க அரசுகளைக் காரசாரமாகக் கண்டித்துக் கருத்து வெளிவிட்டார்.

கைதிகள் தொடர்பான ஜெனிவா ஒப்பந்தத்தின் சகல ஷரத்துக்களையும் இலங்கை அரசு மீறிவிட்டது. இலங்கை அரசு தனது சொந்த மக்களான தமிழருக்கு எதிராகவே

(10ம் பக்கம் பார்க்க)

## ஆந்திரா அமைச்சரவை விஸ்தரிப்பு

ஹதராபாத், ஜூலை 11

ஆந்திரபிரதேஷ் அமைச்சரவை விஸ்தரிக்கப்படுகின்றது புதிய அமைச்சர்களுக்கு இன்று பதவிப்பிரமாணம் நடைபெறவுள்ளது.

மாநில சட்டப்பேரவையின் 'பஜட்'கூட்டத்தொடர் இந்த பதவியேற்பு நிகழ்ச்சிக்குப்பின் ஆரம்பமாகும்.

முதலமைச்சர் திரு. என் டி. ராமராவின் தற்போதைய அமைச்சரவையில் கபினட் அந்தஸ்துடைய பதினாறு அமைச்சர்களும், பதினொரு இணைஅமைச்சர்களும் உள்ளனர்.

# மக்களின் அடிப்படை உரிமையில்கைவைப்பதாகும்

## 5 கட்சி கூட்டமைப்பு கருத்து

[நமது நிருபர்]

உள்ளூராட்சித் தேர்தல்களை பிரதேச சபைத் தேர்தல்களுடன் முன்கூட்டியே நடாத்துவதற்கு அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. இது மக்கள் தமது சொந்த விருப்பத்தின் மேல் ஒரு அரசாங்கத்தை தெரிவு செய்வதற்கான பொதுத் தேர்தலில் வாக்களிக்கும் அவர்களின் அடிப்படை உரிமைகளில் கைவைப்பதாகும் என பொதுத் தேர்தலை நடாத்தும்படி வற்புறுத்துவதற்காக ஒன்றுபட்டுள்ள 5 கட்சிகளும் சேர்ந்து வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, சிறிலங்கா மக்கள் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, மகாஜன எக்சத் பெரமுனை ஆகிய கட்சிகளின் பிரமுகர்கள் இவ்வறிக்கையில் கையெழுத் திட்டுள்ளார்கள்.

அதிகாரத்தைக் கைவிடாமலிருப்பதற்காக ஐ. தே. கட்சி அரசாங்கம் அடுத்து வரும்இம்மாதிரியான நடவடிக்கைகளினால் மக்கள் ஏமாற்றமடையமாட்டார்கள் என்பதோடு இந்த அரசாங்கத்திற்கு ஏற்றவகையில் சரியான வகையில் பாடம் புகட்டுவார்கள் என்றும் நம்புவதாக அவ்வறிக்கை கூறுகிறது.

## வடமராட்சியில் இருந்து அகதிகள்

[அச்சுவேலி நிருபர்]

வட மராட்சியிலிருந்து பாதுகாப்புக்கருதி இடம்பெயர்ந்த மக்கள் பலர் அச்சுவேலி ஆவரங்கால். புத்தூர்பகுதி பாடசாலைகளிலும் ஆலயங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

வல்லைவெளியைத் தாண்டி அச்சுவேலிப்பகுதிக்கு வந்த மக்கள் ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம், ஆவரங்கால் சிவன் கோயில், புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி புத்தூர் மெதடிஷ் மிஷன் பாடசாலை ஆகியவற்றில் தங்கியுள்ளனர்.

இவர்களுக்கான உணவு மற்றும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு தற்காலிகமாக தங்கியிருப்பதற்கு ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

## மணவாளக்கோல உற்சவம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வண்ணை ஸ்ரீ பன்றிக்கோட்டு விஸ்வலிங்க மகா கணபதி கோயில் அஷ்டோத்கர சகஸ்கர சங்காபிஷேகமும் மணவாளக்கோல உற்சவமும் நாளை திங்கட்கிழமை காலை நடைபெறவுள்ளன.

காலை 11 மணிக்கு சங்காபிஷேகமும் 12-30 மணிக்கு மகேஸ்வர பூஜையும் மாலை திருவூஞ்சல் உற்சவமும் நடைபெறவுள்ளன. [ஊ]

## பஞ்சாப் ஹரியான சம்பவங்கள்——

# பலியான பஸ் பயணிகளுக்கு தலா ரூ. 10 ஆயிரம் வழங்கப்படும்

சண்டிகார் ஜூலை 11

பஞ்சாப்பிலும், ஹரியானாவிலும் பயங்கரவாதிகளினால் படுகொலை செய்யப்பட்ட மூன்று பஸ் பிரயாணிகளின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா பத்தாயிரம் ரூபா வீதம் வழங்குவதென அகிலபாரத காங்கிரஸ் [ஐ] கமிட்டி முடிவு செய்துள்ளது.

கமிட்டியின் பொதுச்செயலர் திரு ஜி கே. மூப்பனார் புதுடில்லியில் இதை அறிவித்தார்.

காயமடைந்தவர்கள் மற்றும் ஊனமடைந்தவர்களுக்கும் தலா ஐயாயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

# இந்திய ஒருமைப்பாட்டை பிரதிபலிக்கும் ஜனாதிபதி பதவி

## நாட்டின் பொதுநலனே அவருக்கு முக்கியம்

இந்தியாவில் மாநிலங்களின் ஒருமைப்பாட்டை பிரதிபலிக்கும் சின்னமாகவே அங்கு ஜனாதிபதி பதவி வகிப்பவர் கணிக்கப்பட்டுவருகிறார் இதற்கமைய இந்தியா சுதந்திரமடைந்த காலம் தொட்டு பல்வேறு சிறுபான்மை இனங்களின் பிரதிநிதித்துவமும் ஜனாதிபதித் தெரிவில் இடம்பெற்றுள்ளது.

இந்த வரிசையில் ஸாகிர் ஹுசெயின், பாக்றுதீன் அகமட் என இருமுஸ்லிம்களும் சீக்கிய மதத்தைச் சேர்ந்த ஸெயில்சிங்கும், திரு. ராஜேந்திரபிரசாத், தென்னிந்தியாவின் டாக்டர் ராதாகிருஷ்ணன், திரு வி வி. கிரி, திரு. நீலம் சஞ்சீவரெட்டி ஆகியோரும் இடம்பெற்றனர். ஜனாதிபதி உப ஜனாதிபதி பதவிகள் இந்தியாவின் பல்வேறு பிரதிநிதித்துவ இணைப்பின் சின்னனமாக விளங்குகின்றன.

நேரு, காமராஜ் பாரம்பரியத்தின் வாரிசான திரு. ஆர். வெங்கட்ராமன் இந்தியாவின் உப ஜனாதிபதியாக இருந்தவர். நவ இந்தியாவின் சிற்பிகளில் முதன்மையான தொண்டன் அதன் அடித் தளத்தை அமைப்பதில் முக்கிய பங்காளன் இந்திரா காந்தியின் ஆட்சியில் நிதி, பாதுகாப்பு அமைச்சு பொறுப்பை வகித்தவர்.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் அண்மையில் எழுந்த சிறுசர்ச்சையில் உப ஜனாதிபதி திரு. வெங்கட்ராமன் நடுநிலைமையுடனும் நிதானத்துடனும் செயற்பட்டமை அவரின் மதிப்பை பல மடங்கு உயர்த்தியது. அவருக்கு வயது 77, எனினும் இந்திரா காங்கிரஸின் நிதான முடிவு திரு. வெங்கட்ராமனை கட்சிஅபேட்சகராக்கியது. இவருக்கு அடுத்தவராயுள்ளவர் திரு. நரசிம்மராவ்

இந்திய இடது சாரிகளின் வேட்பாளரான திரு கிருஷ்ண ஐயருக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிச கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவு வெகுவாக உண்டு கேரள உயர்நீதிமன்ற நீதியரசராகுமுன் கேரள நம்பூதிபாட் அமைச்சரவையில் இரண்டு வருடங்கள் அங்கம் வகித்தவர் பொதுவாக இவர் மனித அடிப்படை உரிமைகளுக்கும் சமுதாய நெறிநலன்களுக்குப் இந்திய முற்போக்கு சக்திகளுக்கும் குரல்கொடுத்து வருபவர்.

இந்திய ஜனபதி தேர்தலில் போட்டியிடும் இவ்விருவருக்குமிடையில் சில ஒற்றுமை உண்டு. அதே போல் வேற்றுமையுமுண்டு தென்மாநிலத்தைச் சேர்ந்த இருவரில் திரு. வெங்கட்ராமன் தமிழ்நாட்டவர் மற்றவர் கேரளத்தைச் சேர்ந்தவர். இருவரும் பிராமண சமூகத்தவர்கள்.

கிருஷ்ணஐயர் மலையாளத்தில் சிறந்த பேச்சாளர். தமிழிலும் சரளமாகப் பேசக்கூடியவர் இருவரும் சட்ட மேதைகள் சென்னை உயர்நீதிமன்றத்தில் கடமையாற்றியவர்கள். விடுதலைப் போராட்டத்திலும் பங்கு கொண்டவர்கள். 2ம் உலக மகாயுத்தத்தின்போது அரசியற் கைதிகளுக்காக திரு. வெங்கட்ராமன் வாதிட்டவர். 1948ல் திரு கிருஷ்ணஐயர் ஓர் அரசியல் பிரிவினருக்கு உதவியதற்காக சிறை சென்றவர்.

அரசியலில் வெவ்வேறு கொள்கைப் பிடிப்பால் இவர்களது தன்மை வேறுபட்டுள்ளது இந்திய யூனியன் ஆட்சியிலும் தமிழக மாநில அரசியலிலும் பொறுப்பான அமைச்சுப் பதவிகளை வகித்த திரு. வெங்கட்ராமனின் இக்காலத்திலான திறமையும், ஆற்றலும் இவரை அரசியலில் ஓர் உன்னத நிலைக்கு உயர்த்தியது.

பொதுநலவாய நாடுகளின் நிதி அமைச்சர்களுடன் ஒப்பிடும் போது இவரின் திறமை முன் நிற்கிறது என்று ஒருமுறை இலங்கை நிதியமைச்சர் திரு. ரொனி டி மெல் கூறினார்.

நீதியரசர் திரு. கிருஷ்ண ஐயர் ஒருவகைப் போராட்ட அரசியல் காலத்திலே வாழ்ந்தவர். சட்ட துறையிலும் அரசியல் வாழ்விலும் இவர் இதனையே கடைப்பிடித்தவர். இந்தியாவின் அறிவாற்றல் மிகு சட்ட மேதைகளில் ஒருவரான திரு ஐயர் இந்திரா காந்தியின் தேர்தல் மனுவழக்கிலும் அவசரகால சட்ட பிரகடனத்தின் போதும் நீதிபதியாக இருந்து அப்போது எழுந்த பல சர்ச்சைகளை நிதானமாக கையாண்ட முறை எல்லோராலும் பாராட்டப்பட்டது.

லோகசபை, ராஜ்ய சபைகளினதும் அவற்றுடன் சனத்தொகை அடிப்படையிலான வாக்குகளை கொண்ட மாநில அரசுகளினதும் பலத்தைக் கொண்டே இத்தேர்தல் அமைகிறது லோகசபையில் இந்திரா காங்கிரஸிற்கு நானூற்றிரண்டு வாக்குகளுண்டு. இது பெரும்பான்மையானது. மற்றும் சில ஹிந்தி மொழி பேசும் மாநிலங்களில் இக்கட்சிக்குள்ள செல்வாக்கை கொண்டும் இந்திரா காங்கிரஸின் வெற்றி ஓரளவு நிச்சயமெனத் தோன்றுகிறது.

ஹிந்தி மாநிலங்களுக்கு வெளியேயுள்ள பல மாநிலங்களில் எதிர்க் கட்சிக்கு செல்வாக்குண்டு. இவை சார்பான வாக்குகள் எதிர்க்கட்சி வேட்பாளருக்குக் கிடைக்கலாம். இந்திரா காங்கிரசுடன் கூட்டுச் சேர்ந்தகட்சிக்குள் கருத்து வேறுபாடுள்ளவர்களின் நிலையிலும் மாற்றம் ஏற்பட்டாலும் இவை காங்கிரஸின் வாக்குப் பலத்தை வீழ்த்தும் என அஞ்சத்தேவையில்லை.

நாட்டின் தலைமைத்துவம் எவ்விதம் நியமனம்பெறவேண்டும் எந்தளவிற்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டுமென்பது பற்றி அரசியல் நிர்ணய சபையில் பலத்த விவாதத்திற்குட்பட்டதுண்டு. எனினும் சில அடிப்படைக் கொள்கைகளில் ஒற்றுமை நிலவத்தவறவில்லை. இந்தியா ஒருகுடியரசு என்பதும் அது முடியாட்சியைக் கொண்டிருக்கவில்லை என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டது இதனால் ஜனாதிபதிப் பதவி மக்கள் தெரிவுக்குரியதென்பதும் அவர் குற்றத்தின் பேரில் விலக்கப்படலாமென்பதும் தெளிவாகிறது.

இந்திய ஆட்சிமுறை பிரதமரைத் தலைமையாகக் கொண்ட பாராளுமன்ற அமைப்பைக் கொண்டது. இதன் பொறுப்பதிகாரம் பிரதமரையும் அமைச்சரவையையும் சார்ந்தது. நாட்டின் நிர்ணய அமைப்பில் ஜனாதிபதியின் பங்கு மாநில மட்டத்திலும் யூனியன் மட்டத்திலுமான விசேட சட்ட அங்கீகாரம்வரைவிரிந்துள்ளது எனவே சட்ட நிர்மாண அதிகாரங்களில் இவருக்கும் பங்குண்டு.

இந்திய ஜனாதிபதியின் தகைமை இங்கிலாந்து முடி மன்னரின் நிலைக்கு ஒப்பானது என்பது அரசியல் விமர்சகர்கள் கருத்து இவரது கடமை. புத்திமதி கூறல், அறிவுரை வழங்கல், எச்சரித்தல் என்பன சம்பந்தமாயுள்ளன எனினும் நாட்டின் அடையாளச் சின்னமாகவே ஜனாதிபதி விளங்குகிறார். அமைச்சர்களது ஆலோசனையின்றி இவரால் எதுவும் செய்யமுடியாது என்ற நிலையில் ஜனாதிபதி உள்ளார் என்பதும் இந்த விமர்சகர்கள் கருத்தாகும்.

1952ம் ஆண்டில் இடம்பெற்ற முதலாவது தேர்தலில் ஜனாதிபதி திரு. ராஜேந்திர பிரசாத் இந்நிலைபற்று சர்ச்சித்ததுண்டு. இந்திய அரசியலமைப்பு எழுத்துருவில் இடம்பெற்றதொகையாகவும், இங்கிலாந்தின் மரபுமுறை அரசியலமைப்புடன் இதனை ஒப்பிட முடியாதென்றும் விவாதித்ததுண்டு. இவ்வகையில் சட்ட அங்கீகாரம், பாராளுமன்ற கலைப்பு விடயங்களில் தமது சொந்தக் கருத்தில் செயலாற்றும் உத்தேசத்தை அவர் வெளியிட்டார். எனினும் அப்போதைய பிரதமர் திரு. நேரு ஜனாதிபதியின் இக்கருத்தை நிராகரித்து அப்போதைய சட்டமா அதிபரின் சட்ட ஆலோசனையை வேண்டி நின்றார்.

தகவல்களை அறியும் உரிமை பற்றி சமீபத்தில் ஜனாதிபதி ஸெயில்சிங்கிற்கும் பிரதமர் ராஜீவ் காந்திக்குமிடையில் சர்ச்சை எழுந்தது. தகவல்களைப் பெறும் விஷயத்தில் வரையறுக்கப்படாத உரிமை ஜனாதிபதிக்கு இருக்கவில்லையெனவும் அமைச்சரவை முடிவுகள் அரசமைப்புச் சட்டங்கள் மற்றும் இவை சம்பந்தமான விடயங்களிலேயே ஜனாதிபதிக்கு உரிமையுண்டென்றும் பிரதமர் கருதினார்.

இதனால் அரசாங்கத்தில் கடும் எதிர்ப்புகள் எழுந்த போதிலும் இதில் ஸெயில்சிங் தமது கருத்தை வலியுறுத்தாது விட்டதால் இவ்வரசியல் சர்ச்சை முடிவுக்கு வந்தது இவ்வாறான சர்ச்சைகளிலும் ஜனாதிபதியே பாராளுமன்ற அதிகாரத்திற்கு விட்டுக் கொடுத்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

நெருக்கடி நிலைமைகளில் ஜனாதிபதிக்கு அதிவிசேட அதிகாரங்களைக் கையாளுதல்பற்றி அதிக சர்ச்சையுண்டு. அவ்விதம் அவசரகாலம் பிரகடனப்படுத்தப்பட்டுப் பாராளுமன்ற அமர்வும் பிற்போடப்பட்டு விசேடசட்ட அமுல்மூலம் நிர்வாக நடைமுறை எழத்தக்க கற்பனைச் சூழ்நிலை உருவாகும்

இத்தகைய சூழல் இடம்பெறும் வேளையில் அவ்வரசியல் அரங்கிலிருந்து தம்மை உயர்த்தியவராய் ஜனாதிபதி நாட்டின் பொதுநலனைப் பாதுகாக்கும் பொறுப்புடன் செயற்படுவார். சில வரையறுக்கப்பட்ட அரசியல் அமைப்புமுறையினால் புத்திமதி கூறல், அறிவுரை வழங்கல், எச்சரிக்கை செய்தல் என்ற நிலையும் ஜனபதிக்கு உண்டு.

ராஜீவின் ஆட்சியில் ஜனாதிபதிபற்றிய பிரச்னைகள் பல எழுந்தன.

திருமதி இந்திரா காந்தி கொலையுண்டதைத் தொடர்ந்து எழுந்த ஓரளவு தடுமாற்றத்தை நிறுத்தி அன்னாது மறைவினால் ஏற்பட்ட இடைவெளியை நிரப்பவும் ராஜீவ் காந்தியின் நியமனம் உதவிற்று.

மாநிலத் தேர்தல் முடிவுகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளபோதிலும் இந்திரா காங்கிரஸின் என்றுமில்லாத பெரும்பான்மையானது ராஜீவின் தலைமைத்துவத்திற்கான ஆதரவைப் பலப்படுத்தியே நிற்கும். எனினும் ஜனாதிபதித் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் பாதிக்கப்படின் அது அக்கட்சிக்கு ஒரு மன வீழ்ச்சியை ஏற்படுத்தலாம். ஆனால் அவ்விதம் நடைபெறும் என்பதற்கில்லை. பாராளுமன்ற அரசியலிலே மேலதிக பெரும்பான்மை பலமும் இக்கட்டைக் கொண்டு

(10-ம் பக்கம் பார்க்க)

# இவ்வாரம் எப்படி?

### மேடம்

அன்புக்காரங்கள் அணைக்கும், அதிகசுறுசுறுப்புடன்செயலாற்றுவீர்கள், முத்தானசந்திப்பும் இன்றுகிட்டும, நிதியில் அபிவிருத்திதென்படும், மனத்தளர்ச்சியும் ஏற்படும், சுகாதாரம் விரும்பத்தக்கது.

### இடபம்

நீண்டநாள் எதிர்பார்த்த வேதனம் இன்றுகைகூடலாம், கடமையிலும் புதிய ஆர்வம் பிறக்கும், ஓவியர்கள் வாழ்வு ஒளிமயமாகும், குடும்பமேம்பாடும் உண்டாம், அவசர நடவடிக்கையைத் தவிர்க்கவும், அதிகாரப் போர்வையைத் தவிர்க்கவும்.

### மிதுனம்

தொழில் நஸ்டமுண்டு, தொல்லைகளும் அதிகரிக்கும் விலைபொருட்களினால் வீண் செலவுண்டாகும், கூர்மையான ஆயுதங்களுடன் பழகாதிருக்கவும், பிறருக்கு உதவுவதில் முன்நிற்பீர்கள், நண்பர்களாலும உதவிகிட்டும்.

### கடகம்

இதயப் படுதாவில் இன்பக் கூத்து, சிலருக்கு திடீர்த் திருமணமும் இடம்பெறும், பூமியால் லாபமுண்டாம், எதிர்பாராத சிக்கல்களில் மாட்டிக் கொள்வீர்கள், மாணவர்கள் கல்வியில்கவனம் செலுத்தவும், தெய்வவழிபாடு விரும்பத்தக்கது.

### சிங்கம்

கொடுக்கல் வாங்கல்களைத் தவிர்த்துக்கொள்ளவும், குடும்பப்பிரச்னை அதிகரிக்கும், கடமையிலும் கண்துடைப்பு வேலைகளுக்கு கனிவான சம்பவங்களும் இடம்பெறும், இனசனமகிழ்ச்சியுண்டு, இருப்பிட மாற்றமுமுண்டாம்.

### கன்னி

பிதாவழியாலும் பெருமையுண்டு, எதையும் துரிதமாகச் செய்வீர்கள், பயனுள்ள தொடர்புகளும் பெருகும், பொருள் நழுவக்கூடும், எவ்விடயத்திலும் அடக்கம் வேண்டும், குடும்பத்திலும் புதிர் தோன்றும்.

### துலாம்

வாகனவிருத்தியுண்டு, வளமான வாழ்வும் உண்டு, விருந்தினர் வருகையுண்டாம் வாய்வுக்கோளாறினால் வேதனைப்படுவீர்கள், அரசபயத்திற்குமிடமுண்டாம், எதிலுமவிரக்தி தோன்றும்.

### விருச்சிகம்

நேர்முகப் பரீட்சைக்கு உகந்ததினம், புத்திக்கூர்மையால் புகழடைவீர்கள், கடமையிலும் முன்னேற்றம் காண்பீர்கள், பொருட் செலவுமுண்டாம், வீணான விவாதங்களும் இடம்பெறும், பொறுமை விரும்பத்தக்கது.

### தனுசு

திரைமறைவில்சதித்திட்டம் உருவாகும், குடும்பத்திலும் சுமுகமான நிலைதென்படும், தொழில்மந்தநிலை உண்டாம், இவ்வாரம் புதிய முதலீடுகளை தவிர்க்கவும், அந்நியர் உதவியுண்டு, ஆளடிமை விருத்தியுண்டு.

### மகரம்

எதிலும் தடைஉருவாகும், பணமுடக்கம் தென்படும், குடும்பத்திலும் பிளவுதோன்றலாம், குருவின்ஆசி நல்வழிக்கு வித்திடும், அயலவருடன் பகைக்காதிருக்கவும், சுமாராக இவ்வாரத்தைக்கழிக்கவும்.

### கும்பம்

மனநிறைவிற்கு இடமுண்டு, அரசபோகமும் கிடைக்கும், கலைஞர்கள் போற்றப்படுவர், புத்திர வழியாலும் நன்மை கிட்டும், குடும்ப அமைதி குலையும், எடுத்தமுயற்சிகள் முறியடிக்கப்படும்

### மீனம்

அவசரமுடிவு ஆபத்தைத்தரும், நிதிநெருக்கடியைத்தவிர்க்க மதிவழிநில், ஏமாற்றம்

(10-ம் பக்கம் பார்க்க)

## தகவல் தாருங்கள்

காஞ்சுரை சமரபாகு, வல்வெட்டித்துறை என்ற முகவரியில் உள்ள எங்களது வீட்டிலிருந்து எனது சகோதரன் வேலுப்பிள்ளை ஜெயதேவன் [வயது 27] என்பவர் 5-7-87 ஞாயிறு நண்பகல் 12 மணியளவில இராணுவத்தினரின் திடீர்ச்சோதனையின்போது கைதுசெய்யப்பட்டு நெலவியடி இராணுவ முகாமுக்கு அழைத்துச்செல்லப்பட்டார். அன்றைய தினம் இரவு நெல்லியடி முகாம் தாக்கப்பட்டது. இதனால் அவருடைய நிலைமை என்னவென்று இன்னமும் தெரியாதுள்ளது. மேற்படி காணமல் போன எனது சகோதரன் பற்றி ஏதாவது தகவல் தெரிந்தவர்கள் தயவு செய்து தற்போது கீழ்க் காணும் விலாசத்தில் வசிக்கும் எனக்கு அறியத் தாருங்கள்.

வே சிவராஜா,
34/1, கலைமகள் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

## வெள்ளிவிழா கண்ட யாழ். வை. எம். சி. ஏ. செயலாளர் எம். தம்பித்துரை

யாழ்ப்பாணம் வை. எம் சி ஏ. ஸ்தாபனத்தின் பொதுச் செயலாளரான எம். தம்பித்துரை வெள்ளிவிழா ஆண்டில் கால்வைத்து சமூகப்பணியாற்றி வருகின்றார்.

1962 ம் ஆண்டு மேமாதம் 2 ம் திகதி யாழ். வை.எம். சி. ஏ. இல் எழுதுவினைஞராக பதவியேற்றஇவர் இன்றுயுபிளி நாயகராக தனது இருபத்தைந்து வருடகால சேவையை பூர்த்தி செய்துள்ளார்.

1972 ம் ஆண்டில் யாழ். வை. எம். சி. ஏ. ஸ்தாபனத்தின் உபசெயலாளராக நியமிக்கப்பட்ட இவர் 1980 ம் ஆண்டு பொதுச்செயலாளராக பதவி உயர்த்தப்பட்டார்.

பங்களூர், புதுடில்லி, பிலிப்பைன்ஸ், ஹொங்ஹொங், பாங்கொக் ஆகிய பலநாடுகளுக்குச் சென்று பலதுறைகளிலும் பயிற்சிபெற்ற திரு தம்பித்துரை அகதிகள் புனர்வாழ்வில் அதிக கவனம் செலுத்தி உழைத்துவருகின்றார்.

1983 ம் ஆண்டில் நடைபெற்ற வன்செயலால் வீடுகளை இழந்து யாழ். பழம்வீதியில் வசிக்கும் வறியமக்களுக்கு வீடுகளை அமைத்துக்கொடுப்பதிலும் யாழ். புனர்வாழ்வுக் கழகம் பளை இயக்கச்சி ஆகிய இடங்களில் வழங்கிய காணிகளில் அறுபத்தைந்திற்கு மேற்பட்ட வீடுகளை அமைத்து அகதிகளாக வந்தவர்களுக்கு வீடமைப்புப் பணியிலும் திரு. தம்பித்துரை அதிககவனம் செலுத்தியுள்ளார்.

25 வருடகால சேவையை திறம்பட செயலாற்றினாலும் தற்புகழ்ச்சியை விரும்பாது மிகவும் அமைதியாகவும் அடக்கமாகவும் பணியாற்றிவரும் தம்பித்துரை பொதுப்பணியை சிறப்புடன் செய்ய பலரும் வாழ்த்துகின்றனர். (ஓ)

ஈழநாடு
வாரமலர்
EELANADU VARA MALAR

# இந்தியாவின் அடுத்த ஜனதிபதி 'வெங்கட்'-'ஐயர்'?

இந்திய ஜனதிபதி தேர்தல் அவசியம் ஏற்படும் பட்சத்தில் இம்மாதம் 13ம் திகதி நடைபெறும் என கடந்த மாத முற்பகுதியில் அறிவிக்கப்பட்டிருந்தது- அவசியம் ஏற்பட்டமையினல் அதாவது மூவர் போட்டியிடுவதால் நாளை தேர்தல் நடைபெறுகிறது.

நாளை நடப்பது இந்தியாவின் 9 வது ஜனதிபதி தேர்தல்.

தேர்தலையே எதிர்பாராத நிலையில் இரண்டு தென் இந்தியர்கள் உட்பட மூன்று பேர் போட்டியிடுகின்றனர்.

தற்போதைய உப ஜனதிபதி திரு. இராமசாமி வெங்கட்ராமன் இந்திரா காங்கிரஸ் வேட்பாளராகத் தெரிவுசெய்யப்பட்ட வேளை அவரே போட்டியின்றி இந்திய ஜனதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார் எனப் பலரும் எதிர்பார்த்தனர்.

ஆனல் நீண்டகாலம் தனிக்காட்டுராஜாவாக ஆட்சி செய்துவரும் இந்திரா காங்கிரஸுக்கு எதிராக பலமுள்ள அணி ஒன்றை உருவாக்குவதில் நீண்டநாட்களாகக் கண்ணும் கருத்துமாக இருந்த எதிர்க்கட்சிகள் குறிப்பாக

**—இரத்தினம்—**

தெலுங்குதேசம் கட்சித்தலைவர் திரு. என். ரி. ராமராவ் எதிர்க்கட்சிகளைக் கூட்டினர். எதிர்க்கட்சிகளின்பொதுவேட்பாளராக முன்னள் நீதிபதி திரு வி. ஆர். கிருஷ்ணஐயரைத் தேர்தலில் நிறுத்தினர்கள்

இதனிடையே சுயேச்சை வேட்பாளராக திரு. மிதிலேஷ் குமார் போட்டியிடமுன் வந்தார். அவரது வேட்புமனு முறையாக இல்லை என வெங்கட்ராமனை முன்மொழிந்த உள்துறை இணை அமைச்சர் திரு ப. சிதம்பரம் ஆட்சேபித்தார். இறுதியில் ஆட்சேபனை நிராகரிக்கப்பட்டு சுயேச்சை மனுவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

தேர்தல் அதிகாரியாகக் கடமையாற்றும் லோகசபையின் தலைமைச் செயலாளர் 34 சுயேச்சை வேட்பு மனுக்களை முறையாக இல்லை என்ற காரணம் கூறி ஏற்கனவே நிராகரித்திருந்தார்.

இறுதியில் இத்தேர்தலில் மும்முனைப்போட்டி ஏற்பட்டு விட்டது.

இந்திய ஜனதிபதி தேர்தலில் மும்முனைப் போட்டி இடம்பெறுவது இதுவே முதல் தடவையாகும்.

நடந்துமுடிந்த எட்டுஜனதிபதி தேர்தல்களில் இரு தேர்தல்கள் தவிர ஏனைய ஆறிலும் அரசு தரப்பு வேட்பாளரும் எதிர்க்கட்சி வேட்பாளருமே போட்டியிட்டனர்.

இந்தியாவின் முதலாவது ஜனதிபதியான டாக்டர் ராஜேந்திரப் பிரசாத் 1952ம் 1957ம் ஆண்டுகளில் இடம் பெற்ற முதலாவது 2வது ஜனதிபதி தேர்தல்களிலும் 1977ம் ஆண்டு நடைபெற்ற 7வது தேர்தலில் திரு. நீலம் சஞ்சீவ ரெட்டியுமே இதுவரை போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்ட ஜனதிபதிகள் என்ற பெருமைக்குரியவர்கள்.

இந்திய ஜனதிபதியைத் தெரிவுசெய்தவற்கு அதாவது இந்த தேர்தலில் வாக்களிப்பதற்கு பாராளுமன்றத்தின் இருசபைகளையும் சட்டப் பேரவைகளையும் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட 4695 பேருக்கே உரிமையுண்டு.

லோகசபை உறுப்பினர்கள் 543 பேரும் ராஜ்யசபையைச் சேர்ந்த 233 பேரும் சட்டப் பேரவைகளைச் சேர்ந்த 3919 பேரும் இத்தேர்தலில் வாக்களிக்கின்றனர்.

தற்போதைய ஜனதிபதி திரு. ஜானி ஸெயில் சிங்கின் பதவிக்காலம் இம்மாதம் 24ம் திகதியுடன் முடிவடைவதால் நடைபெறும் இத்தேர்தலில் இன்றைய உபஜனதிபதி வெங்கட்ராமனுக்கே வெற்றி கிட்டும் எனப் பொதுவாக எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு ஹரியானவில் படுதோல்வி ஏற்பட்டதையும் மறந்துவிடமுடியாது.

## நுட்பம் மிக்க குறள்

தீவிரமான புரட்சி அரசியலிலிருந்து விலகுவதற்குக் காரணமாயிருந்தது தாம் பெற்ற மெய்ப் பொருட்காட்சியென்று குறிப்பிட்டிருக்கின்றர் அரவிந்தர்.

''என்னைச் சிறையிலிட்டபோது அங்கிருந்த உயரிய மதில்கள் எனக்குத் தெரியவில்லை. அது வாசுதேவன் என்னைச் சூழ்ந்திருந்ததாகத் தோன்றியது. சிறையின் முன்னின்ற மரத்தின் கிளைகளுக்குக் கீழ் நடந்தபோது அது மரமாகத் தெரியவில்லை. அதனை வாசுதேவனுகவே அறிந்தேன் ''

''அங்கு இருந்த காவலாளனும், நாராயணனுகவே காட்சியளித்தான். படுக்கைக்காக எனக்குக் கொடுக்கப்பட்ட முரட்டுப் போர்வைகளிலும் விரிப்புகளிலும் என் காதலனுகிய கண்ணனின் அழகிய தோள்களையும் அரவணைப்பையுமே கண்டுணர்ந்தேன் ''

''நீதிமன்றத்தில் எனக்குமுன் இருந்த நீதிபதி வழக்குத் தொடுப்பவர், வழக்குரைஞர் ஆகியோர்களை நான் காணவில்லை. அவர்களெல்லாம் எனக்குக் கண்ணனுகவே தோன்றினர். அங்கே கண்ணபிரானே அமர்ந்திருந்தார்; காட்சியளித்தார், என்னை நோக்கிப்புன் முறுவல் பூத்தார்.''

இவ்வாறு தாம்பெற்ற மெய்ப் பொருட்காட்சி அநுபவத்தை அரவிந்தர் விபரித்திருக்கிறர். இவ்விளக்கத்துக்குப் பொருத்தமான குறள்.

''எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

## வெற்றிக்கு வழி


மிக்க கவனத்துடன் நினைக்கவும் சரியான முடிவுக்கு வரவும் திட நம்பிக்கையுடன் காரியத்தை நடத்தவும். யோக்கியமாக வாழவும். சுறுசுறுப்புடன் வேலையைச் செய்யவும். அன்போடு உரையாடவும். ஒழுங்காக நடக்கவும்.

வாழ்வில் எத்துறையிலும் உமக்கு வெற்றி கிடைத்தேதீரும். மனச் சாந்தியுமுண்டாகும். தூய்மையான அறிவும் ஏற்படும் அளவிடப்படாததும் என்றும்குறையாததுமான தெய்வீக சம்பத்து உமக்குக் கிடைக்கும் என்றும் இறைவனடியில் இருப்பீராக.

—சிவானந்தர்.
[மில்க்வைற் செய்தி]

# அறிவும் நகைச்சுவையும் கொண்ட சர்ச்சிலின் பேச்சு

### எதிர்காலம் பற்றி அண்ணு



நிகழ்காலத்தில் அமிழ்ந்திருப்பதை விட்டுத் தலையைத் தூக்கி வருங் காலத்தைக் கொஞ்சம் நோக்கும்பண்பு பெற்றவர்களே வரலாற்றுச் சாவடிகளில் என்றென்றும் நிலைத்து நிற்கும் ஆற்றல்பெற்றவர்கள்.

சர். வின்ஸ்டன் சர்ச்சிலின் கூர்நாதான் இரண்டாம் உலகப் போரில் பிரிட்டனைக் காப்பாற்றியதென்பதில் ஐயம் சிறிதுமில்லை. துணிவும் ஆற்றலும் நிரம்பிய சர்ச்சில் கேட்போரை உணர்ச்சிவசப்படுத்துவதுபோல் மட்டுந்தான் பேசத்தெரிந்தவர் என்பது இல்லை எதிரியின் வாயடைத்துப்போகும்படி செய்ய நகைச்சுவை ததும்பப் பதில் சொல்லவும் வல்லவர். எடுத்துக்காட்டாக:

வின்ஸ்டன் சர்ச்சில் 'டோரி' யாக-எதிர்க்கட்சித் தலைவராக வீற்றிருந்தபோது திரு ராம்சே மாக்டொனல்ட் என்பவர் பிரதம மந்திரியாக இருந்தார். அவரைப்பற்றி சர்ச்சிலின் கருத்தைக் கேட்டார்கள்சிலர். இவர் சொன்னர்:

''திரு ராம்சே மாக்டொனல்டா? கெட்டிக்காரராயிற்றே- மிகச்சிறிய கருத்துக்களில் மிக அதிகமான வார்த்தைகளைத் திணிப்பதில்!''

உலக சரித்திரத்திலேயே முதன்முதலாக- 1919ல் லேடி ஆஸ்டர் என்ற பெண்மணி ஹவுஸ் ஆப் காமன்ஸ் அங்கத்தினராக நுழைந்தாள். ஒரு பெண் அங்கத்தினரானமை சர்ச்சிலுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. ஆஸ்டரைக் கண்டாலே இவர் சீறிவிழுவார்,

''பெண்கள் அங்கத்தினராவது ஏன் உங்களுக்குப் பிடிக்கவில்லை?'' என்று அவள் இவரைக் கேட்டாள்.

''நான் தனியாகக் குளித்துக் கொண்டிருக்கும்போது ஒரு பெண் குளியலறைக்குள் வந்துவிட்டால் எவ்வளவு கஷ்டமாக இருக்குமோ அவ்வளவு கஷ்டமாக அருவருப்பாகஇருக்கிறது நீ இங்கே வந்திருப்பது'' என்றர் சர்ச்சில்.

''நீங்கள் குளிக்கும்போது பெணகள் பார்க்க விரும்புவது போல் அவ்வளவு அழகாக நீங்கள் இல்லையே! என்று கிண்டலாகப் பதில் சொல்லிவிட்டாள் லேடிஆஸ்டர். அப்பொழுது பதில் சொல்லிவிட்டாலும் மற்றொருமுறை வாயடைத்துத்தான் போகவேண்டியிருந்தது.

''நீங்கள் மட்டும் என் கணவனுக இருந்தால் உங்களுக்குக் கொடுக்கும்காப்பியில் விஷம் கலந்து கொடுத்துவிடுவேன்'' என்றுள் எரிச்சலோடு.

உடனே அவர் சொன்னர்: ''நீ மட்டும் என்மனைவியாக இருந்தால் உடனே அதை வாங்கிக் குடித்துவிடுவேன்'' என்றுர், எரிச்சலோடு.

ஒரு தொழிற்கட்சி அங்கத்தினர் நெடுநேரமாகப் பேசிக் கொண்டிருந்தார். சர்ச்சில் தலையைக் குனிந்து கொண்டு கண்களை மூடிக்கொண்டு உட்கார்த்திருந்தார். இதைப் பார்த்த அந்த அங்கத்தினர் ''மதிபபிற்குரியசர்ச்சில் இங்கு வந்து தூங்குகிறரே!'' என்றுர்.

தன் தலையைத் தூக்கிப் பார்த்துவிட்டுச் சொன்னர். ''இல்லை இல்லை! நான் விழித்துக் கொண்டுதான் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தேன். ஆனல் உங்கள் பேச்சைக் கேட்டபிறகு தூங்கியிருக்கலாமென்றே இப்பொழுது தோன்றுகிறது.''

சர்ச்சில் பிரான்சுக்கு சென்றிருந்தபோது போர்நாள்களில் சர்ச்சில் செய்த சேவையைப்பாராட்டி டிகோலே அவரைக் கௌரவித்தார்.

அதற்கு நன்றி தெரிவித்து சர்ச்சில் இப்படித்தான் பேசினர்: ''நான் இன்று ஆங்கிலத்தில்தான் பேசப் போகிறேன். முன்பு சில தடவைகள் பிரஞ்சு மொழியில் பேசினேன் என்றலும் அவை போர் நாட்கள். துன்பம் நேரிடுவதெல்லாம் போர் நாட்களிலேதான்...''

மிக அபாயகரமான சந்தர்ப்பங்களில்கூட சர்ச்சிலுக்கு நகைச்சுவைதான்! அவர் பிரதம மந்திரியாக இருந்தபோது ஒருமுறை நீராவி வண்டியில் போய்க் கொண்டிருந்தார். வெளியே தலையை நீட்டி முன்னும் பின்னும் வேடிக்கை பார்த்துக்கொண்டே சென்ற அவர், வண்டி செல்லும் பாதையை ஒட்டி இருந்த ஒரு இரும்புக் கம்பத்தைப் பார்க்கவில்லை.

சடாரென்று அவர் பக்கத்தில் இருந்த ஒருவர் மட்டும் அவரை உள்ளே இழுத்திராவிடில் சர்ச்சிலின் தலை உருண்டிருக்கும்!

அவர் சிரித்துக் கொண்டே சொன்னர்; ''த்சொ, த்சொ, மாக்மில்லனுக்கு கிடைக்கவிருந்த பதவி ஒரு நிமிடத்தில் தவறிவிட்டதே!''

சர்ச்சில் பேசுகிறர் என்றல் கூட்டமே நிரம்பிவழியும். இதைப் பார்த்த அன்பர் ஒருவர் அவரிடம் கூறினர்;

''நீங்கள் பேசினல் வருகிற கூட்டத்தைப் பார்த்தீர்களா? உங்களை அவ்வளவு நேசிக்கிறர்கள்!'' என்று சொன்னர்.

''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. என்னைத் தூக்குப் போடப் போகிறர்கள் என்று அறிவியுங்கள் இதைப்போல் மூன்று மடங்கு கூட்டம் வரும்!''

இதைப் போன்ற சுவையான பதில்களாக சர்ச்சில் கணக்கில்லாமல் தந்திருக்கிறர். இவற்றையெல்லாம் படித்த ஒருவர், ஒரு சவால் விட்டார். தம் நண்பரிடம் ''சர்ச்சில் எல்லாருக்கும் இடக்காகவே பதில் தருகிறரல்லவா? நான் அவரிடம் ஒரு கேள்வி கேட்டு நேரடியான பதிலை வரவழைக்கிறேன்'' என்று!

''அதுதான் சர்ச்சிலிடம் நடக்காது'' என்றர் நண்பர்.

முதல்வர், சர்ச்சிலிடம் போய் ''சர்ச்சில் மணி எவ்வளவு?'' என்று கேட்டார்.

சர்ச்சில் குனிந்து தன் கடிகாரத்தைப் பார்த்துவிட்டு ''ஏன்? உங்கள் கடிகாரம் என்ன நேரம் காட்டுகிறது?'' என்று கேட்டாராம்.

## ஈழத்துத் தமிழ்க்கவிதை வளரும் வரலாறும்—23

# முருகையனும் புலமைநெறிக் கவிதையும்

### கலாநிதி நா. சுப்பிரமணியன்

மறுமலர்ச்சிக்காலப் புத்தெழுச்சியோடு உருவான அ. ந. கந்தசாமி, மஹாகவி முதலிய கவிஞர்களை அடுத்து 1950 அளவில் ஒரு புதிய வீறுர்ந்த கவிஞர் பரம்பரையொன்று ஈழத்து நவீனஇலக்கிய உலகில் அடியெடுத்துவைத்தது இ.முருகையன், நீலாவணன், இராஜபாரதி, சில்லையூர் செல்வராசன். அண்ணல். புரட்சிக்கமால் முதலியோர் இப் பரம்பரையின் முக்கிய கவிஞர்களாவர். இவர்களுள் முதல்நிலையில் வைத்துக் கணிக்கப்படும் சாதனையாளராகத் திகழ்பவர் இ. முருகையன் ஆவர்.

#### முருகையனும் அவரது ஆக்கங்களும

சாவகச்சேரியிலுள்ள கல்வயல் கிராமத்தில் புகழ்பெற்ற தமிழாசிரியராகத் திகழ்ந்த இராமுப்பிள்ளை அவர்களின் புதல்வராக 1935ஆம் ஆண்டிற் பிறந்த முருகையன் அவர்கள் விஞ்ஞானப் பட்டதாரியாகி. கல்வித்துறையில் முதுமாணிப்பட்டமும் பெற்று, கலாநிதிப்பட்டத்திற்கான ஆய்வினை மேற்கொண்டுள்ள ஒரு கல்வியாளர். கல்வித்துறையில் உயர் பதவிகள் பல வகித்து இப்பொழுது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே சிரேட்ட துணைப்பதிவாளராகத் திகழ்பவர். தமது பன்னிரண்டாவது வயதிலே — யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் மாணவனாகப் பயிலும்காலத்தில் — கவிதை இயற்றத் தொடங்கிய இவர் கடந்த நாற்பதாண்டு காலமாக அத்துறையில் தொடர்ந்து ஈடுபட்டு வருபவர்; படைப்பாளியாக மட்டுமன்றித் திறனாய்வாளராகவும் — கவிதைச் சிந்தனையாளராகவும் திகழ்ந்து வருபவர். கவிதைச் சிந்தனையாளர் என்ற வகையில் இவர் கலாநிதி க. கைலாசபதியுடன் இணைந்து எழுதிய கவிதைநயம் [1970] என்ற நூலும் தாமே எழுதியஒருசிலவிதிசெய்வோம் [1972] என்ற நூலும் அவ்வப்போது எழுதி வந்துள்ள கட்டுரைகளும் கவிதைப் படைப்பு, திறனாய்வு ஆகியவற்றில் ஈடுபடுவோர்க்குக் கிடைத்துள்ள அரிய கருத்துக் கருவூலங்களாகும்.

முருகையன் அவர்களது தமிழ்ப் புலமைக்கான அடிப்படைகள் அவர் பிறந்து வளர்ந்த சைவத்தமிழ் மரபிலும் புராணபடனச் சூழலிலும் இயல்பாகவே அமைந்து கிடந்தன. அப்புலமை கவிதைத்துறையீடுபாடாவதற்குத் தூண்டுகோலாகவும் பிரதான ஊக்கிகளாகவும் அமைந்தோர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் தமிழாசானாகத் திகழ்ந்த [காலஞ்சென்ற] வித்துவான் க. சா த்திகேசு அவர்களும் சகபாடிகளாகத் திகழ்ந்த க. கைலாசபதி [காலஞ்சென்ற பேராசிரியர்] அவர்களும் க சிங்காரம், நடனசபாபதிசர்மா ஆகியோருமாவர் [சமூகத்தொண்டன் மலர் 1981. ப 3]

மாணவப்பருவத்தில் முளைவிட்ட கவித்துவத்தை அப்பருவம் கடந்த பின்னரும் தொடர்ந்து பேணி வளர்த்துக் கொண்ட முருகையன் அவர்கள் இன்றுஈழமும் தமிழகமும் நன்கறிந்த முதல்வரிசைக் கவிஞராகத் திகழ்கிறார் இவரது கவிதைகள் ஈழத்து இதழ்களான அல்லி, ஆனந்தன், இந்துஇளைஞன், இந்துசாதனம், இளமுழக்கம், ஈழகேசரி, கலைச்சுடர், கலைச்செல்வி, கலைமதி, கவிஞன், கிருதயுகம், சமூகத்தொண்டன், சுதந்திரன், தாயகம், தினகரன், தேன்மொழி, தேனருவி நோக்கு, மரகதம், மல்லிகை, வீரகேசரி முதலியவற்றிலும் தமிழக இதழ்களான எழுத்து, கல்கி, சரஸ்வதி, கலைமகள், தாமரை, தீபம் ஆகியவற்றிலும் பிரசுரமாகியுள்ளன. இவற்றுள் இன்று வாழும் இதழ்களிற் பிரசுரமாகி வருகின்றன. பத்திரிகை என்ற களத்தோடு மாத்திரம் அமையாமல் மேடை, வானொலி ஆகிய களங்களையும் முருகையன் அவர்கள் உரியவகையிற் பயன்படுத்தி வந்துள்ளார்கள். இவற்றிற் கவியரங்க வெளிப்பாடுகளாக இவரது கவிதைகள் பலமுறை ஒலித்துள்ளன. இவரது பாநாடகங்கள் பல வானொலியில் ஒலிபரப்பப்பட்டுள்ளன. சில மேடையேறியுமுள்ளன.

முருகையனது கவிதையாக்கங்கள் தனிக்கவிதை, நெடும்பாட்டு, பாநாடகம் எனும் முப்பிரிவில் அமைவன. தனிக்கவிதைகள் என்ற வகையிலே பிறமொழித் தமிழாக்க முயற்சிகளும் உள. மேற்குறித்த வகைகளிலான ஆக்கங்களில் நூல்வடிவு பெற்றுள்ளவை வருமாறு:

தனிக்கவிதைகள்
அ- ஒருவரம்-1964
-தமிழாக்கக் கவிதைகள்
ஆ- நெடும்பகல்-1967
தனிக்கவிதைகள் பலவும் நெடும்பகல் என்ற நெடும் பாட்டும்

நெடும் பாட்டுக்கள்
இ- ஆதிபகவன்-1988
ஈ- அது அவர்கள்-1886

பாநாடகங்கள்
உ- வந்துசேர்ந்தன- தரிசனம்-1965
ஊ- கோபுர வாசல்-1969
எ- வெறியாட்டு-1986

முருகையனது தனிக்கவிதைகளிற் சிலபதினொரு ஈழத்துக் கவிஞர்கள் [1984] மரணத்துள் வாழ்வோம் [1985] மல்லிகைக் கவிதைகள் [1997]ஆகிய தொகுப்புக்களில் இடம்பெற்றுள்ளன: தமிழாக்கக் கவிதைகளிற்சில பாலஸ்தீனக் கவிதைகள் [1981] என்ற தொகுப்பிலும் இடம்பெற்றுள்ளன. 'கடூழியம்' என்ற பாநாடகம் நாடகம் நான்கு [1980] என்ற தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. அவரது பாநாடகங்கள் பல நித்திலக்கோபுரம், செழியன் செங்கோல், அந்தகனே ஆனாலும் குற்றம் குற்றமே, எடுபாடு, அப்பரும் சுப்பரும் முதலிய- வானொலியில் [சில மேடைகளிலும்] நடிக்கப்பட்ட நிலையில் [நூலுருப்பெறாது] உள்ளன. முருகையன் அவர்கள் தமது சமகாலக் கவிஞராகத் திகழ்ந்த மஹாகவியுடன் இணைந்து 'தகனம' என்ற காவியத்தை தேனருவி இதழில் 1962ல் எழுதினர். அதுவும் நூல்வடிவு பெறவில்லை.

மேற்சுட்டிய வகைகளிலான ஆக்கங்களூடாகப் புலப்படும் முருகையனது கவித்துவத்தினை நோக்குவதற்கு முதற்கண் அவரது கவிதைக் கொள்கை, நோக்கு, கவிதைகளின் பொதுவியல்பு என்பவற்றை அவதானிப்பது அவசியமாகிறது.

#### கவிதைக் கொள்கை நோக்கு, இயல்பு

முருகையன் அவர்கள் ஒரு கவிதைச் சிந்தனையாளர் என்ற வகையிலே கவிதையின் பண்பு பயன், அமைப்பியல் என்பன தொடர்பாகத் தெளிவான கொள்கைகளைத் தமது நூல்களிலும் கட்டுரைகளிலும் அவ்வப்போது முன்வைத்து வந்துள்ளார். படிப்போர் கேட்போர் இருசாராருக்கும் இன்

அமையும்- ஒலிநயமற்ற-வசன கவிதை, புதுக்கவிதை என்னும் பெயர்களிலான ஆக்கங்களையும்அவர் கவிதைகளாக ஒப்புக்கொள்வதில்லை. ஒலிநயம் என்ற வகையில் இசைக்கு முதன்மையளித்துக்கருத்தைப் பின்தள்ளும் செயன்முறையையும் அவர் கண்டிப்பர், இவ்வாறு அமைந்தவற்றை அவர் 'எண்ணத்தை மயக்கி உள்ளிழுத்துக்கட்டுப்படுத்தும் மாய ஒலிச் சூழல்' என்பர் [ஒரு சில விதிசெய்வோம்-ப.49] கவிதைக்குரிய ஒலிநயம் அதன் சொற் பொருளுடன் ஒன்றி இரண்டறக் கலந்து அமைய வேண்டும் என்பது அவரது கொள்கை. இவ்வாறமையும் ஒலிநயத்தை 'ஒலி இயக்கஓவியம்' என அவர் சுட்டுவர். (மேற்படிப.51] பேச்சுவழக்கு மொழியினை உரிய வகையில் அழுத்தல், இழுத்தல். நிறுத்தல் என்னும் முயற்சிகளுடன் செயற்படுத்தினால் 'ஒலிஇயக்க ஓவிய'ங்களான கவிதைகளைப் படைக்கமுடியும் என்பதையும் அவர் விளக்கியுள்ளார் [மேற்படி பக் 51-56] இத்தகைய கவிதைகளைப் படைப்பதற்கு யாப்பில புதிய பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு முன்பாக யாப்பிலக்கணப் பயிற்சி தரும் ஓசையுணர்வு நுட்பத்தைக் கிரகித்துக் கொள்ள வேண்டும் என்பதை இவர்பல சந்தர்ப்பங்களில் வலியுறுத்தி வந்துள்ளார் இவரது மிகப் பெரும்பாலான கவிதைகள் மரபுயாப்புக்களானவெண்பா, விருத்தம் முதலியவற்றில் அமைந்த ஒலி இயக்க ஓவியங்களே என்பது குறிப்பிடத்தக்கது.

கவிஞன் என்ற வகையிலே முருகையன் அவர்கள் அகன்ற உலக நோக்குடையவர். தமிழன் என்ற தளத்தில் நின்று அனைத்துலகப் பகைப் புலத்

பத்தையும் உயர் இலட்சியங்களையும் அளிப்பது கவிதையின் பண்பும்பயனும் என்பது அவரது கருத்து [கவிதைநயம்ப 2] இவ்வகையில் அவர் கவிதையின் கலைப்பெறுமதி, சமுதாயப்பயன்பாடு ஆகிய இரு அம்சங்களிலும் திடமான நம்பிக்கை கொண்டவராகத் திகழ்கிறார்.

கவிதையின் அமைப்பியலில் ஒலிநயத்திற்குரிய இன்றியமையாமையை அவர் எப்பொழுதும் வலியுறுத்தி வந்துள்ளார். கவிதைக்கும் ஒலிநயத்துக்கும் இயல்பான- பிரிக்கமுடியாத- பிணைப்புண்டு என்பது அவரது உறுதியானகருத்தாகும். [மேற்படி ப 30] வசனத்தை ஒடித்து வரிசைப்படுத்தியது போல

தில் தமிழ்மொழியையும் தமிழர் பண்பாட்டையும் நோக்கிய அவர் அனைத்துலகப் பொதுமனிதன் என்ற தளத்தில் நின்று மானிட சமுதாயம் முழுவதையும் நோக்கியவர். தமிழன் என்ற தளத்தில் நின்று அமைந்த அவரது நோக்கு நவீன அறிவியல், சமூகவியல் வளர்ச்சி நிலைகளைத் தமிழும் தமிழர் சமுதாயமும் எய்தவேண்டுமென்ற உணர்வோட்டத்தை முக்கிய தொனிப்பொருளாகக் கொண்டிருந்தது. 'புனைவாய் புது நூல்'' என்ற தலைப்பில் அமைந்த கவிதையில்,

[8-ம் பக்கம் பார்க்க]

---

# ஓர் இனிய பயணம்

### த. சண்முகலிங்கம்

இவ்விடத்தில் பிண்டம், சிராத்தம் வேணிதானம் தம்பதி பூசை முதலிய கிரியைகளும் செய்கிறார்கள். இங்கு காசித்தீர்த்தம் எடுப்பது விசேடம். நாம் ஒரு பெரிய பிளாஸ்ரிக் பாத்திரத்தில் தீர்த்தம் எடுத்துக்கொண்டோம். இத்தீர்த்தத்தைப் பின்னர் காசியில் செம்புகளில் அடைத்து ஊருக்கு கொண்டுவந்தோம.

பிரயாகையில் பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை கும்பமேளா நடைபெறுவதுண்டு. நாம் பிரயாகைத் தீர்த்த யாத்திரையை முடித்துக்கொண்டு படகிலேறித் திரும்பி யமுனைக்கரையிலுள்ள அக்பரின் கோட்டைக்குச் சென்று அங்குள்ள பலமூர்த்திகளைத் தரிசித்தோம். பின்னர் கோட்டைக்கு அருகிலே 15 அடி நீளமுள்ளதும் சயனித்த நிலையில் அமைந்துள்ளதுமான ஆஞ்சநேயரைத் தரிசித்தோம்.

இராவண வதமும் இராமர் பட்டாபிஷேகமும் முடிந்தபின்னர் ஆஞ்சநேயர் இங்கு வந்து சயனம் செய்ததாக ஐதீகம். அதன் பின்னர் அருகிலுள்ள காஞ்சி சங்கரர் மடத்தாரால் அண்மையில் கட்டி முடித்துக் கும்ப பிஷேகம் செய்யப்பட்ட கோவிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்தோம். இக்கோவில் மூன்று மாடிகளைக் கொண்டது. கீழ்மாடியில் மகாவிஷ்ணுவும், மூன்றுவது மாடியில் யோகசஹஸ்ரலிங்கமும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது விமானம் [தூபி) தென் இந்திய சிற்பவடிவில் அமைந்துள்ளது. தென் இந்திய பிராமணர்கள் அர்ச்சகர்களாகக் கடமையாற்றுகிறார்கள் பின்னர் படகிலேறி பகல் 12-30 மணியளவில் சத்திரம் வந்து சேர்ந்தோம்.

பிரயாகை யாத்திரை செய்பவர்கள் யமுனை நதிக்கு மேற்கரையிலிருந்து சிறிது தூரத்தில் அமைந்துள்ள சோமநாதரைத் தரிசித்து வணங்க வேண்டுமென்பது மரபு. மோதிலால் நேரு வசித்த ஆனந்த பவன், அலகபாத் சர்வகலாசாலைமுதலியவை இங்கு பார்க்கத்தகுந்த சிறந்த இடங்களாகும். மாலை 6-00 மணிக்கு நாம் அலகபாத் நகர் புகையிரத நிலையத்திலிருந்து ''இன்டர்சிற்றி'' புகையிரதமூலம் காசிக்குப் புறப்பட்டோம்.

அலகபாத்திலிருந்து காசி 170 கிலோ மீட்டர் தூரத்திலுள்ளது. இரவு 9-30 மணியளவில் வாரணாசி சென்றடைந்து அங்குள்ள நாட்டு கோட்டை நகரத்தார் சத்திரம் சென்று தங்கினோம். புகையிரத நிலயத்தில் வழிகாட்டிகளின் தொல்லை இருப்பினும் சத்திரத்தின் விலாசம் எம்மிடம் இருந்த படியால் சிரமமின்றிச் சத்திரத்தை அடைந்தோம். இச்சத்திரத்தை ''நாட்கோட் சத்திரம்'' என்று இந்தியில் அழைப்பார்கள் புகையிரத நிலயத்திலிருந்து ஆறு கிலோ மீட்டர் தூரத்தில் கொக்கோவில்லா என்ற நகரப்பகுதியில் இச்சத்திரம் அமைந்துள்ளது. விசுவநாதர் ஆலயத்திற்குச் சமீபமாக உள்ளது. பல அறைகள் கொண்ட பெரிய சத்திரம் தென் இந்தியர்கள் குறிப்பாக தமிழர்கள் தங்குவதற்கு வசதியானதும் பாதுகாப்பானதுமாகும், குமாரசாமிமடம் என்று அழைக்கப்படும் திருப்பனந்தாள் மடம் ஒன்றும் காசியில் உண்டு இப்மடமும் நம்மவர்கள் போய்த் தங்க வசதியான மடமாகும்.

காசி புண்ணிய தலங்கள் எல்லாவற்றிலும் தலை சிறந்தது. சங்கை நதிக்கு மேற்குக் கரையில் காசிநகர் அமைந்துள்ளது காசிக்கு வடக்கே வரணஎன்ற ஆறும்தெற்கேஅசி என்ற ஆறும் கங்கையில்வந்து கலக்கின்றன. இந்த இரு ஆறுகளுக்குமிடையே இத்தலம் அமைந்திருப்பதனல் வாரணாசி என்ற பெயரும் இதற்குண்டு. காசியின் பெருமையும் அங்குள்ள கங்கையின் பெருமையும் புராண நூல்கள் பலவற்றிலும் இராமாயணம், பாரதம் ஆகிய இதிகாச நூல்களிலும் சொல்லப்பட்டுள்ளது. புராண நூல்களில் சொல்லப்பட்டுள்ள பல நிகழ்ச்சிகள் காசியில் நிகழ்ந்துள்ளன. பிரம்மாவும் விஷ்ணுவும் சிவபெருமானின் அடிமுடி தேடிய

[8ம் பக்கம் பார்க்க]

---

# நா. பார்த்தசாரதி கருத்துக்கள்

**வீரர்கள்**

மேகலைகள் தவறி ஆற்றில் வீழ்ந்துவிட்டால் ஆற்றோடு போய்விடுகிறார்கள். வீரர் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு நீந்தக் கற்றுக் கொள்ளுகிறார்கள்.

* * *

**உலகவாழ்க்கை**

உலக வாழ்க்கையை உணராதவர்கள்தான் வாழ்க்கையைக் கண்டு பயப்படுகிறார்கள் அதைப் புரிந்துகொண்டவர்கள் அதனைத் தாண்டிவிடுவார்கள்.''

* * *

**மன்னிப்பு**

''நல்லவனாக இருக்க முடியாத காரணத்தால் சூழ்நிலையால் கெட்டுப்போனவர்களை மன்னிக்கலாம். நல்லவர்களாக இருப்பதுபோல் உலகிற்கு பாசாங்கு காட்டிக்கொண்டே கெட்டவர்களாக இருப்பவர்களை மன்னிக்கவேமுடியாது.''

* * *

**கோழைகள்**

வாழ்க்கையில் ஏற்படும் பிரச்னைகளை சந்திக்கத் திராணியற்றவர்கள்தான் தற்கொலை செய்துகொள்கிறார்கள். பிரச்னையைத் தீர்ப்பதற்கு தற்கொலைதான் ஒரே வழி என்றால் மனித இனமே பூண்டோடு அழியவேண்டியதுதான்.

* * *

**அந்தஸ்து**

'ஒவ்வோர் இனத்திலும் அடித்தளத்தில் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிற வர்க்கத்திலிருந்து உதவிகளும், உபகாரத் தொகைகளும பெற்று பணம், பதவி, வசதியான வாழ்க்கையெல்லாம் பெற்று மேலநாட்டுக்குப் போய்விட்டவன், அதற்குப் பின் அந்த உயரமான இடத்திலேயே இன்னொரு தனி உயர்ஜாதியாகி விடுகிறான். அவன் தான் எங்கிருந்து வந்தானோ அந்த மக்களுடன் தன்னை சேர்த்து நினைக்கவே கூசுகிறான் தன்னைப்போல் வசதியுள்ளவர்களிடம்மட்டுமே தன்னைப் பிணைத்துக்கொள்கிறான்.

அனுப்பியவர்:-
நீராவை ஹரி

# தொடர் நவீனம்

**17-6-86** மாலை இலங்கையில்...

மழை பெய்து கொண்டிருக்கும்போதே சுள்ளென்று வெயிலடிக்கும் ஒரு கலவை மன உணர்வு வீணாவுக்குள் ஏற்பட்டது.

பசும்புல் நிறைந்த மைதானத்தைச் சுற்றிக் கல்லூரி மாணவர்களின் அணிநடை அழகுப் பவனியாக நடைபெறுவதைக்கண்டு மனம் அமைதி பெற்றுக் குதூகலிக்கிறது. உள்ளே இருந்து ஒலிக்கும் இசையின் தாளத்திற்கு ஏற்றபடி ஒன்றின் பின் ஒன்றாக நாலு இல்லங்கள் ''லெப்ற் றைற்'' ''லெப்ற் றைற்'' 'லெப்ற் ''என்று லயம் தவறாமல் கால் வைத்துக் கையை வீசி வரும் காட்சி மனதை அள்ளுவதாகவே இருக்கிறது ஆனால்...?

முன்னால் வருவது பச்சை இல்லம். அந்த இல்லத்தின் தலைவர் பச்சைக் கொடியை ஏந்தியபடி முன்னால் கம்பீரமாக வர அவரைத் தொடர்ந்து முப்பத்து இரண்டு ஆண்களும், அதேயளவு எண்ணிக்கை கொண்ட பெண்களும் கொண்ட அணி பச்சை பாஜ், பச்சை றிபன், பச்சை 'டெல்ற்' போட்டு வெள்ளை நிறச் சீருடையில் நடந்து வருவது மிக அருமையான காட்சியாகஇருக்கிறது! இவள் முன்பு இந்தக் கல்லூரியில் படித்த போது பச்சை இல்லந்தான்!

பழைய மாணவி என்ற முறையில்தான் இவளை மெய்வல்லுநர் போட்டியில் அறிவிப்பாளராக அழைத்திருக்கிறார்கள். பச்சை நிறத்தைத் தொடர்ந்து நீலம் பிறகு சிவப்பு...! இறுதியாக மஞ்சள்!

பிரதம விருந்தினர் ஏறி நிற்கும் மேடைக்கு அருகில் வந்ததும் 'ஐஸ்றைற்' சொல்லி அவாசலைக் கடக்கும் வரை தலையைத் திருப்பி கைகளை அசைக்காது மரியாதை செலுத்தி நடந்து அணி அவர்களைக் கடந்து முடிந்தவுடன் மீண்டும் முன் போல நடந்துசெல்கிறார்கள்.

திடீரென அந்தமாணவர்கள் எல்லாம் 'யூனிபோம்' அணிந்த போர்வீரர்களாகி கைகளில் துப்பாக்கிகளுடன் அணிநடையில் செல்வதுபோல மனக்கண்ணில் ஒரு தோற்றம். நிராகரிக்க முடியாத ஏதோ ஒன்றுதன்னை அவ்வாறு சிந்திக்க வைப்பதை வீணா உணர்ந்தாள்!

கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டு பார்க்கிற போது நான்கு இல்லங்களும் மைதானத்தைச்சுற்றி வந்து மைதான நடுப்பகுதிக்குச் சென்று 'கிளாஸ் ஹோல்ற்' சொல்லிக் கவனமாய் நிற்கிறார்கள். பசைத் தரையில் 'சொக்ஸ்' மட்டும் போட்ட வெள்ளைப் பாதச் சுவடுகள் படிய அவர்கள் நிற்பது.. பசுமை தான்! அவர்களுக்கு 'இலகுவாய் நில்' கட்டளை கொடுக்கப்படுகிறது.

இவளுக்கு மனதினுள்ளே இலகுவாய் நிற்க முடியவில்லை! ''இப்போது முதன்மை விருந்தினர் அவர்கள் கல்லூரிக் கொடியை ஏற்றி வைப்பார்'' என்று தேனினும் இனிய குரலில் இவள் அறிவிப்புச் செய்ததைத் தொடர்ந்து முதன்மை விருந்தினர் அதிபர் அருகில் நடந்துவர கம்பத்தில் கட்டப்பட்டிருந்த கயிற்றை அவிழ்த்துக் கொடியைப் பறக்க விடுகிறார் சாரணர் தலைவன் உதவி செய்கிறான்.


உள்ளேயிருந்து கொடிப் பாட்டுப் பாடப்படுகிறது.

''கொடி பறக்குது கொடி பறக்குது கொடி பறக்குது பாரடா. கோலமிக்க கோவில் எங்கள் கொடி பறக்குது பாரடா'' எல்லோரும் எழுந்து நின்று கொடிக்கு மரியாதை செய்கின்றனர்.

எப்போதோ ஒருநாள் 'தனி நாட்டின் கொடி' இவ்வாறு பறக்க விடப்படுகையில் தானும் அதில் கலந்து மகிழ வேண்டும் என்ற விருப்பம் தோன்றிய அதே கணத்தில் ''என்னுடைய வாழ்வும் இப்படித்தான் கொடி கட்டிப் பறக்கும் என்று கனவு கண்டேனே'' என்ற நினைவு உள்ளுக்குள் வருவதையும் தவிர்க்க முடியவில்லை.

அவன் ஏன் அப்படி மாறினான்? மாற்றம் என்பது உலகின் மறுக்க முடியாத விதியா? அல்லது நியதியா? மனிதனின் சிந்தனைகளும் செயற்பாடும் கூட மாறாமல் இருக்க முடியாதா?

மனித வாழ்வு எப்படியும் நூறு வருடங்களுக்கு மேல் அமையப்போவதில்லைஅதிலும் இன்றைய சூழ்நிலையில் திட்டமிடப்பட்டு ஒரு இனம் அழிக்கப்பட்டு வருகின்ற நிலையில்... அந்த வயதுஇன்னும் குறைந்து விடுகிறது. இந்த எண்ணம் இவளுக்குள் ஒரு தற்காலிக உணர்வைத் தோற்றுவித்தது. அதற்குத்தான் எத்தனை போராட்டங்கள்?




எப்போதிருந்து ஜீவனிடம் மாற்றம் ஏற்படத்தொடங்கியது என்று நினைத்துப்பார்க்க முயன்றாள். மனதுக்குள் காரணம் தெரியாத ஏகாந்த உணர்வுகள் சுழன்றன.

அவனும் அவளுமாகச் சங்கரின் 'பகன் தினேஷ்' உடைய நான்காவது பிறந்த தின விழவிற்குப் போயிருந்த போதே முதன் முதலில் அந்த மாற்றம் அவனுக்குள் பிரசவமாகியிருக்கலாம். அல்லது அதற்கு முன்பே மனதிற்குள் உருவாகி அன்றுதான் வெளியேற முயன்றிருக்கலாம். அல்லது அதற்கு முன்பே குடும்பத்தில் கடைசிப்பிள்ளையாய்ப் பிறந்து விட்ட காரணத்தால் மிகச் சிறுவயதிலிருந்தே..?

சங்கர் அந்த விழாவிற்குப் பத்தாயிரம் ரூபா வரை செலவழித்திருப்பான்.

''பிறந்த நாள் கேக் டிசைன் வீணை வடிவத்தில் அமைந்த அதன் ஐசிங்..'' அது பற்றியே பல விமர்சனங்கள்! அதற்கு மட்டுமே தனியாகப் பல புகைப்படங்கள்!

வெளியே முற்றத்தில் போடப்பட்டிருந்த அலங்கார வளைவில், மோகன நிலவின் வருஷிப்பில் பாண்ட் வாத்தியக்கோஷ்டியின் பாடல்கள்! அரைமணி நேரத்திற்கொன்றாக ஒவ்வொரு புதிய உடைகளில் தோன்றிய தினேஷின் முகத்தில் அன்று உலக சௌந்தர்யங்கள் யாவும் ஒன்று சேர்ந்து விட்டநிறைவு! விழாவிற்குப் போயிருந்த குழந்தைகளுக்கெல்லாம் பந்தும் பலூனுமாகப் பரிசுப் பொருள்கள்!

பல கமெராக்களின் 'கிளிக் கிளிக்' படமெடுப்புகளுக்கு மேலாக வீடியோ படமெடுப்பு பிறகு எடுத்த படத்தை அதிலேயே போட்டுக்காட்ட ஒவ்வொருவரும் தன்னைப்பார்த்து மகிழும் பூரிப்பு!

தமிழர் கலாசாரங்களையே குழிதோண்டிப் புதைக்கும் ஆட்டங்கள்! ஒரு ஏகாந்த சோகம் இவளுக்கும் அப்போது அனுபவமானது தான்!

அந்த விழாவிற்குப் போயிருந்த பபியோ அல்லது பாப்பாவோ ''எங்களுககு ஏன் அப்பா இப்படி ''பேர்த்டே'' கொண்டாடுறேல்லை?'' என்று கேட்கவில்லை. கேட்காவிட்டாலும் அவர்கள் மனதிற்குள்ளாவது நினைத்து மறுகக் கூடும் என்ற நினைவு ஜீவனின் சமநிலையைக் குழப்பி விட்டதா?

ஆனால் அவன் அதைக் கலந்துரையாடித் தீர்த்திருக்கலாம். அவ்வாறு செய்யவில்லை. வழக்கம் போலவே உணர்ச்சி வசப்பட்டு விட்டான். இம்முறை சற்று அதிகமாகவே !

பணம் நிறையவே குவிந்து போயிருக்கும் சங்கர் வீட்டில் ஒரே ஒரு ஆண்பிள்ளையும், இவர்களுக்கு இரண்டு பெண் பிள்ளைகளும் வந்து அமைந்ததே ஒரு தவறா? அதையும் கூட யார் தீர்மானித்தார்கள்? ஜீவனுடைய நிற மூர்த்தங்கள் தானே தீர்மானித்தன? இவள் என்ன செய்ய முடியும்!

சிவப்பும் கறுப்புப் கலந்த புள்ளி இறகுகளைக் கொண்ட பெரிய வண்ணத்துப் பூச்சி ஒன்று எங்கிருந்தோ பறந்து வந்து, அறிவிப்பாளர் மேசையில் வைக்கப்பட்டிருந்த பூச்சாடிப் பூ ஒன்றில் அமர முயன்றது அமருவதும் உடனே பறந்து செல்வதும் மீண்டும் வந்து அமர முயல்வதுமாய்ச் சிறிது நேரம் போராடிற்று.

இந்த வண்ணத்துப் பூச்சியின் குஞ்சுப்பூச்சி ஆணாக இருக்குமோ அல்லது பெண்ணாக இருக்குமோ என்பதைத் தீர்மானிப்பது தாய்ப்பூச்சியின் புணரிக்கலந்தான் என்ற நினைவு வந்தபோது ''நல்ல காலம் மனிசரிலை அது ஆண் புணரியாலை தீர்மானிக்கப்படுறது. இல்லாட்டி அந்தப் பிழையும் என்னிலை பொறிஞ்சிருக்கும்...'' என்று நினைத்து ஆறுதல் பட்டுக்கொண்டாள் இவள்.

பபியினுடைய முதலாவது பிறந்த நாளைத்தானும் பெரிதாகக் கொண்டாட இவர்களின் பொருளாதார நிலை இடம் கொடுக்கவில்லை. ஜீவனின் அக்காவின் திருமணத்திற்குக் கொடுத்த அதிக அளவு பணம்...' இவளிடம் நகை கூட அதிகம் இல்லாத நிலை! (புன்னகை தவிர) யாரிடமும் எந்த ஆபத்திலும் கடன் வாங்குவதில்லை என்ற ஜீவனின் கொள்கை (அல்லது வக்கிர உணர்வு) வேறு!

அன்று...

தினேஷின் பிறந்த நாள் கொண்டாட்டம் முடிந்து வீடு திரும்பிய அந்த இரவு! திரும்பும் போதே வீதியை இருள் முற்றாக ஆக்கிரமித்திருந்தது. ஆங்காங்கே கண்சிமிட்டும் ஓரிரு சாலை விளக்குகள் தவிர! வானிலே தேய் பிறை.

வீடு திரும்பிய பிறகும் ஒரே புழுக்கமாக இருந்தது. திடீரென்று காற்றில் எப்படி இவ்வளவுக்கு ஈரப்பதன் அதிகரித்துப் போனது? காற்று வீச மறந்த கடல் பேசாமல் இருந்த ஈரப்பதன் நிரப்பிய நிலையை அடைந்து விட்ட புழுக்கமான அந்த இரவு!

ஜீவனின் முகம் மாறியிருந்தது வழக்கம் போல ஏதோ கீறிக்கொண்டிருந்தான்.

ஓவியம், நாடகம் இவை இரண்டிலுமிருந்து ஜீவனைப் பிரிக்க முடியாது. இவள் கேட்டாள்,

''ஏன் உங்கடை முகம் ஒரு மாதிரி இருக்கு?''

''ஒண்டுமில்லை''

''என்னட்டை மறைக்கிறதாலை பிரச்சினை தீராது. சொல்லுங்கோவன் என்னபிரச்சினை?''

அவன் மீண்டும் பேசாமலே இருந்தான்.

'ரெட் பக்சண்டலே' சொல்வது போல

''ஒரு குடும்பத்தில் இளைய பிள்ளையாக வளருகிறபோது,

அந்தக் குழந்தைகாலம் முழுவதும் சிலவிடயங்களில் பாதிக்கப்படும் அப்பிள்ளையின் சிந்தனைகள் அக் குடும்பத்தில் ஒரு போதும் காத்திரமாகக் கணிக்கப்பட்டிருக்காது சிலவேளை அப்பிள்ளையின் கருத்துக்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கும். அல்லது தவறாக விளங்கிக் கொள்ளப்பட்டிருக்கும் ஆகவே அக்குழந்தை இயல்பாகவே தன் சிந்தனைகளைக் கலந்துரையாடித் தீர்த்துக்கொள்வதைவிட எழுதி அல்லது கீறியே வெளிப்படுத்தப்பார்க்கும்...',

என்பது ஜீவனைப் பொறுத்தவரை முற்றாகப் பொருந்திவிட்டதோ?

அவளின் பலதர வற்புறுத்தலின் பின்
''நீங்கள் தானே எல்லாத்தையும் 'ஹெஸ்' பண்ணுவீங்கள் இதையும் 'ஹெஸ்' பண்ணுங்கோவன்...'' என்றான்.

அந்த நிலையிலும் அவன் அவளுக்குக் கொடுத்துவந்த ''நீங்கள்' என்ற சமமரியாதை குறைந்துபோகவில்லை.

''என்னுடைய ஊகங்கள் தான் உங்கடை கவலைக்குக் காரணமா?''

''நீங்கள் ஊகம் செய்யிற ஊகம்செய்யாத எல்லாக் காரணமும்தான்...'' அவனுடைய குரலில் முதன்முறையாக ஒரு விரக்தி கலந்த வெறுப்புணர்வினை அவள் உணர்ந்தாள்.

''எனக்குத் தெரியும் எங்கட பபிக்கு நாங்கள் பெரிசா ஒண்டும் செய்யேல்லை...''

''உங்கடை மனச்சாட்சிக்கு எல்லாம் தெரியிறது பெரிய காரியம் எண்ட அளவிலை திருப்திப்பட வேண்டியது தான்...,

அவன் நீண்ட பெருமூச்சை விட்டுக்கொண்டு எழுந்து போய்படுத்தான்.

''இதுக்கும் என்ரை மனச்சாட்சிக்கும் என்னதொடர்பு'' தலையணையில் தளர்ந்து கிடந்த அவனது கைகளைப் பிடித்து அவள் கனிந்த குரலில் கேட்டாள்

''சங்கரின்ரை மனிசிக்கும் உங்களுக்கும் என்னவித்தியாசமெண்டு நினைச்சுப் பார்த்தால் தெரியும்...''

அவள் முகத்தில் ரத்தம் குப்பெனப் பிரவகித்தது.

ஓ! சங்கரின் மனைவி நாலு இலட்சம் இனும் கொணர்ந்த பெரிய பணக்காரி! அதுவா? அதையா சொல்கிறார் இவர்! அதையேதானா? அதைச் சொல்லவேண்டிய தேவை வந்துவிட்டதா?

''காசுகுடுத்தும் ஒருபெண்ணை நான் அடையவிரும்பமாட்டன். காசுவாங்கியும் ஒரு பெண்ணை அடைய விரும்ப மாட்டன்'' என்று சொன்ன ஜீவன், அந்த வேறுபாட்டை நினைக்க வேண்டியகாலம் வந்துவிட்டதா? பணம் உண்மையில் அவ்வளவு முக்கியமானது தானா?

அவனது கரத்தைப் பிடித்திருந்த கைகள் தானாகத் தளர்ந்து விலகின!

ஆம்! அன்றிலிருந்துதான் அவன் புறத்தில் வேறுபடத் தொடங்கினான்

வேறுபடத் தொடங்கினான் என்றுகூடச்சொல்லமுடியாது. அவனும் ஒரு சாதாரண மனிதனாக மாறத்தொடங்கினான் என்றுதான் சொல்லலாம்!

''இப்போது பச்சை இல்லத்தின்தலைவர் தமது இல்லக் கொடியையேற்றிவைப்பார்...'' என்ற இவளது அறிவிப்பைத் தொடர்ந்து அந்த இல்லத்தலைவர் கம்பீரமாக நடந்துவந்து, செங்கோணமாக வெட்டித் திரும்பி தமது இல்லக்கொடியைக் கம்பத்தில் ஏற்ற பச்சை இல்ல மாணவர்கள் கைதட்டி ஆரவாரம் செய்கிறார்கள்.

பச்சைக்கொடி கம்பீரமாக காற்றில் அசைகிறது!

பச்சை ஒரு துணை நிறமாக இருந்தபோதிலும் கூட மனதுக்கு மிக இனிய நிறம். குளிர்மையும் புத்துணர்வும் ஊட்டுகிற நிறமென்று அலக்ஸ் சாண்டா ஸ்ரொடாட் சொல்வார். ஜீவனுக்குக்கூடப் பச்சைநிறத்தில் மிகப் பிரியம். அவர்களின் திருமண எழுத்தின் போதுகூட அவன் ஒரு அழகிய மென்பச்சைநிறக் காஞ்சிபுரம்தான் பரிசாகக் கொண்டுவந்தான்.

''பச்சை, நீலம், கறுப்பு நிறங்கள் மங்கள காரியத்துககு எடுக்கப்பிடாது தம்பி.'' என்று அவனின் தாயார் எவ்வளவோ சொல்லியும் அவன் பிடிவாதமாக அதனையே கொண்டுவந்தான்.

''உலகத்திலை தாவரங்களிலை பச்சையம் இருக்கிறதாலைதான் நாங்கள் எல்லாரும் உயிர் வாழிறம். உயிர் வாழ்வுக்கு மூலாதாரமான நிறம் பச்சை! உளவியல் ரீதியாக மனதுக்கு நிறைவு தாற நிறம் பச்சை நாடகமேடைகளிலும் நாங்கள் பச்சையையும் நீலத்தையுமே குளிர் நிறங்களாகப் பாவிக்கிறம். அன்பு, வசந்தம் கோடை ஓய்வு இதுகளைப்போல அற்புதமான விஷயங்களைக் காட்டவே நாங்கள் மேடையிலை பச்சை ஒளியைப் பயன்படுத்திறம். பிறகு அதுஎப்படி அமங்கலமான நிறமாகும்?''என்பது அவனதுவாதம்! பிடிவாதமும்தான்!

அவனது வாதங்களை எவ்வளவு ரசிக்கலாமோ அவ்வளவு அவனது பிடிவாதங்களால் ஒருவர் பாதிக்கவும்படலாம். என்பதை ஜீவன் எப்போதும் உணர்ந்ததாய் இல்லை. அப்படியான ஒரு பிடிவாதத்தில்தான் சவூதிக்கும் போயிருக்கிறான். அவளையும் இரண்டு வயது கூட நிரம்பாத பபியையும் மூன்றரை வயதான பாப்பாவையும் விட்டுப்பிரிந்து...!

அங்குபோய்ச் சிலகாலத்தின் பின்னர் இவர்களையும் அழைத்துக்கொள்வதாய் கூறினான் ஆனால்...?

''இப்போது நீல இல்லத்தின் தலைவர் தமது இல்லக் கொடியையேற்றிவைப்பார்...'' அவளது அறிவிப்பு ஒலி பெருக்கி ஊடாக வெளியில் உரப்பாகக் கேட்கிறது.

[தொடரும்]

# ஈழத்து தமிழ் வளமும்...

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

அஞ்ஞானம் அகன்றிட,
ஆன்ற புது
மெய்ஞ் ஞானம் விளங்கிட
விந்தை பல
இஞ்ஞாலம் அறிந்திட,
ஈந்த கலை
விஞ்ஞான விருந்திடு வெ
தமிழில்
[நெடும் பகல் தொகுதி ப 8

எனவரும் பகுதி மேற்படி உணர்வோட்டத்தைத் தொகுத்துச்சுட்டி நிற்பதாகும். இவரது பல தனிக் கவிதைகள் பாநாடகங்கள் ஆகியவற்றில் மேற்படி தொனிப் பொருளை நாம் உய்த்துணரலாம். அனைத்துலக மனிதன் என்ற தளத்தில் நின்று மானிட சமுதாயம் முழுவதையும் நோக்கும் அவர் மானுடத்தின் வரலாறு, அறிவியல் வளர்ச்சி, சமூக-பொருளியல் நிலைமாற்றங்கள் அவற்றால் பண்பாட்டில் நிகழ்ந்த தாக்கங்கள் முதலியவற்றை அவதானிக்கிறார்; அவற்றினூடே புலப்படும் அறிவுப் போக்குகளை இனங்காட்டி விலக்கவும். ஆக்கத்திற்கு உரமிடவும் முனைகிறார். இவ்வகையில் பொதுவுடமைச் சிந்தனைச் சார்பு அவரது நோக்கில் தெளிவாகத் தெரிகிறது. தனிக்கவிதைகளில் ஆங்காங்கு புலப்படும் மேற்படி மானிட சமுதாயநோக்கும் பொதுவுடமைச் சிந்தனைச் சார்பும் நெடும்பாட்டுக்களில் நிறைவாக வெளிப்படக் காணலாம். சில பாநாடகங்களிலும் இவற்றை அவதானிக்கலாம். மறுமலர்ச்சிக் காலத்தில் அ. ந. கந்தசாமி அவர்கள் புலப்படுத்தி நின்ற பொதுவுடமைச் சிந்தனையை அடுத்து வந்த காலகட்டத்திற்பேணிநின்ற முதன்மைக் கவிஞராக முருகையன் அமைகிறார் என்பது ஈண்டுசுட்டிக் காட்டத்தக்கது.

முருகையன் அவர்களது கவிதையின் இயல்பு பற்றிப் பொதுவாக நிலவும் கருத்து அவை 'சிந்தனைக் கனதி' உடையவை என்பதாகும். [20ம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழிலக்கியம் -1979 ப 22] காலஞ்சென்ற பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள் முருகையனின் கவிதைகளைப் பற்றிக் கூறும்பொழுது,

''கேவலம் காட்சிப் பொருளைக் கண்டு அவற்றின் உந்துதலினால் வருணனைக் கவிதை பாடும் முதிரா இளைஞர் பலரின் நோக்க நிலைக்கு அப்பாற்சென்று, உள்ளத்தில் ஒவ்வொரு கணமும் தோன்றும்அருவமான நுண் பொருள்களைச் சொல் வசப்படுத்தும் ஆன்ம சக்தி படைப்பாற்றல் முருகையனிடம் நிரம்ப இருக்கிறது'' எனக் குறிப்பிட்டுள்ளார். அதாவதுசாதாரணபுலக் காட்சி சார்ந்த அனுபவங்களின் அடிப்படையிலன்றி ஆழ்ந்த உள்ளுணர்வின் வெளிப்பாடாகவே முருகையன் கவிதைகள் அமைகின்றன என்பதாகும். இவ்வகையில் முருகையனின் கவிதைகள் உணர்ச்சியின் ஊடகங்களாக அன்றி உணர்வுகள் சிந்தனைகள் என்பவற்றின் ஊடகங்களாகவே அமைகின்றன எனலாம். முருகையனின் கவிதைகள் சாதாரண மட்டத்திலுள்ள வாசகனின்- அல்லது பேட்போனின் - மேலெழுந்த வாரியான ரசனைக்கோ அல்லது புனைவியல் [Romantic] பாங்கான ஈடுபாடுகளுக்கோ உரியன அல்லா. அவை தரமான வாசகனின் சிந்தனைக்கு விருந்தாக அமைபவை ஒரு புலமை நெஞ்சத்துடன் இன்னொரு புலமை நெஞ்சம் உரையாடும் பாங்கில் திகழ்பவை. பேராசிரியர் கா. சிவத்தம்பியவர்கள் முருகையனுக்குக் கவிதை முற்றிலும் புலமைவாதச் சாதனமாக [Poetry as a form Intellectual Argument] அமைந்துள்ளது என்பர். [சிந்தனை 11-1-1984 ப. 53] இது முற்றிலும் பொருத்தமான ஒரு கணிப்பு ஆகும். எனவே முருகையன் கவிதைகளைப் 'புலமை நெறிக் கவிதைகள்' என்று குறிப்பிடுவதே பொருத்தமாகும்.

இந்த அடிப்படைகளை மனதிற்கொண்டு அவரது கவிதையாக்கங்களையும் அவற்றினூடே புலப்படும் கவித்துவத்தையும் நாம் அணுகலாம்.

[தொடரும்]

# பயணம்...,

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்ச்சியும் காலனைக் காலால் உதைத்த நிகழ்ச்சியும் காசியில் நிகழ்ந்ததாக சிவ புராணங்கள் கூறுகின்றன.

சிவனும் பார்வதியும் மணம் முடித்தபின் பூமியில் வாழத் தேர்ந்தெடுத்த இடம் காசி என்றும் அவர்கள் முதல்கால் ஊன்றிய இடம் காசிதான் என்றும் காசிகாண்டம் கூறுகின்றது. காசியில் சிவபெருமான் தாமே ஒரு சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தாராம். அது தான் பூவுலகில் முதலில் வந்த லிங்கமாகும்.

பல முனிவர்கள் சித்தர்கள் துறவிகள் காசியில் வாழ்ந்திருக்கிறார்கள். ஆதி சங்கரர் காசியில் இருந்துதான் பிரம்ம சூத்திரம் உபநிடதங்கள். கீதைஆகிய நூல்களுக்கு உரை எழுதினார். துளசி தாசர் காசியிலிருந்து இந்தியில் இராமாணத்தை எழுதினார். காசி என்ற சொல்லுக்கு ஒளிமயமானது என்பது பொருள். பல பெருமைகளையுடைய சிறந்த புண்ணிய தலமாகிய காசியை நாம் வந்தடைந்ததும் எமது மனம்நெகிழ்ந்தது.

காசிவந்தடைந்த மறுதினம் 2-5-86 காலை சத்திரத்தார் ஒழுங்கு செய்து தந்த மொழி, வழி தெரிந்த வழிகாட்டி ஒருவரின் துணையுடன் கங்கையில் நீராடுவதற்காக கங்கைக்கரை சென்றடைந்தோம். சிவபெருமானின் சிரசில் இருக்கும் கங்கைபகீரதனின்தவ வலிமையால் பூமிக்குவந்ததாகப்புராண வரலாறு கூறுகிறது. 12700 அடி உயரத்தில் இமயமலையில் கோமுகி என்ற சிகரத்தின் ஒரு குகையில் உற்பத்தியாகி 1560 மைல் நிலத்தில் தவழ்ந்து கடலில் கலக்கிறது.

கங்கையை கங்காமாதா கங்காதேவி என்று அழைப்பது மரபு. கங்கையில் நீராடினால் தமது பாவங்கள் எல்லாம் நீங்கிவிடும் என்பது இந்துக்களின் நம்பிக்கை, பாவங்களினால் சதா அசுத்தமாகிக்கொண்டிருக்கும் கங்கை கும்பமேளாவின் போது மகான்கள், துறவிகள் நீராடுவதினால் மீண்டும் புனிதத் தன்மையைப் பெறுகிறது என்பது புராண வரலாறு. பாவம் போக்கும் சக்தி கங்கைக்கு உண்டு என்ற நம்பிக்கையை ஏற்றுக்கொள்ளாதவரும் துருப்பிடிக்கும் தகரப்புட்டியில் அடைத்து வைத்த கங்கைநீர் 20 வருடங்கள் சென்றாலும் கெடாது இருப்பது கண்டு வியப்படைகிறார்கள்.

அலகபாத்தில் பிரயாகையில் யமுனை சரஸ்வதியுடன் சேர்ந்து கங்கை காசியில் ஆழமாக ஒரு மைல் அகலத்தில் அமைதியாக செல்கிறது கங்கை தெற்கு நோக்கி ஓடுவதுதான் இயல்பு. ஆனால் காசியில் மட்டும் வடக்கு நோக்கி ஓடுகிறது. அதனால் கங்கைக்கு இவ்விடத்தில் பெருமை அதிகம் கங்கையின் மேற்குக்கரையில் மூன்றுமைல் தூரத்துக்கு 64 படித்துறைகள் உள்ளன. இவற்றைகாட் என்று இந்தியில் அழைப்பார்கள், ஒவ்வொரு படித்துறைக்கும் தனித்தனிப் பெயர் உண்டு. இரண்டு துறைகள் மயானத் துறைகளாகும். உயரிய படிக்கட்டுக்கள், கோவில்கள், மடங்கள் முதலியன பல அமைப்புக்களைக் கொண்ட கங்கைக்கரை மிக அழகாகக் காட்சியளிக்கிறது.

கங்கைநதி பிறைச் சந்திரனைப் போன்று சற்று வளைவாக இருப்பதனால் ஒரே இடத்திலிருந்து எல்லாக் கட்டங்களையும் பார்க்க முடிகிறது. 64 கட்டங்களிலும் தீர்த்த மாடுவது கடினம் முக்கியமான ஐந்து கட்டங்களில் தீர்த்தமாடிக் கரையிலுள்ள மூர்த்திகளைத்தரிசித்து வணங்குவது சிறந்தது என்றுசொல்லுவார்கள். இதை பஞ்ச தீர்த்த யாத்திரை என்று அழைப்பார்கள். நாம் தனிப் படகில் சென்று இந்த ஐந்து கட்டங்களிலும் தீர்த்தம் ஆடினோம்.

முதலில் எல்லாக் கட்டங்களும் தெற்கே உள்ள அசிகங்கம் கட்டத்திலும் இரண்டாவதாக தசாசுவமேத கட்டத்திலும் தீர்த்தமாடினோம். இக் கட்டத்தில் தீர்த்தமாடுவோர்கூட்டம்நிரம்பிக் காணப்படுகிறது.

மூன்றாவதாக எல்லாக் கட்டங்களுக்கும் வடக்கே உள்ள வருணசங்கம் கட்டத்திலும் நான்காவதாக பஞ்சகங்கா கட்டத்திலும் இறுதியாக மணிகர்ணிகா கட்டத்திலும் தீர்த்தமாடினோம். அசிசங்கம கட்டத்திலிருந்து வருணசங்கம கட்டம் வரை உள்ள தூரம் சுமார் ஐந்து மைல் ஆகும். படகில் சென்று ஐந்து இடங்களிலும் நீராடி வருவதற்கு நான்கு மணிநேரம் செல்கிறது. மணிகர்ணிகா கட்டத்தில் தான் இறந்து போன நம்முன்னோர்க்குச் செய்யவேண்டிய பித்ரு கடமைகளைச் செய்யவேண்டும்.

(தொடரும்)

# புதிய புத்தகம்

கலை இலக்கிய பத்திரிகை நண்பர்கள் கடந்த ஒக்டோபரில் வெளியிட்ட 'சசிபாரதி கதைகளைப்படித்ததும் ஒருவியப்பும் கூட ஒரு நிறைவும் ஏற்பட்டன. வளவளத்து அலம்பி வாசகரை விளைவு கெடுக்காமல் கதைசொல்கிற ஒரு எழுத்தாளனை அத்தொகுதி எனக்கு அறிமுகப்படுத்தியது.

பதிப்புரையில் திரு எஸ். திருச்செல்வம் அவர்கள் குறிப்பிடுவதுபோல 'முப்பத்தாறு வருட முதற்கட்டப் பத்திரிகைச் சேவை முடிவுற்ற காலத்தில்தான் அவரது ஐம்பத்தாறு வதுவயதில் அவரது முதற்பிரசவம் நிகழ்கிறது' தான் காரணமாயிருக்கவேண்டும்.

லேயே நல்லவையாகப்படுகிற 'கடவுளும் மனிதனும்' ,கலக்கமும் தெளிவும்' போன்ற கதைகளை இன்னும் இறுக்கி, அடர்த்தியைக் கூட்டியிருந்தால் மேலும் சிறப்புற்றிருக்கலாம் என்றுபடுகிறது.

குறுங்கதைகளிலும் சிறுகதைகளிலும் தலைப்புக்கள் பெரும் பங்கினை வகிக்க முடியும் கதைகளின் நீளத்தைக் கணிசமாகக் குறைப்பதிலோ அன்றி கனத்தில் ஒருமடங்கு கூட்டுவதிலோ அவை அதிகம் உதவலாம். அப்படிப் பார்க்கும்போது இத் தொகுப்பின் சிலகதைகளுக்கு இன்னும்காத்திரமான தலைப்புகளைச் சூட்டியிருக்கலாமென்றும் படுகிறது.

'அறுசுவை உணவில் ஒரு

## சசிபாரதி கதைகள்

அறுபது பக்கங்களில் அடங்குகிற இருபத்தாறு கதைகள். இந்த இருபத்தாறில்மேலோட்டமான சம்பவங்களைச் சுட்டும் கதைகளும் ஆழமான குறியீட்டுக் கதைகளும் போகிற போக்கில் அநாயாசமாக மனிதனைப் படம் பிடித்துக் காட்டும் படைப்புக்களும்- உருவகங்களும் கூட அடங்குகின்றன. சில தத்துவக் கதைகளெனக் கோலங்காட்டுகின்றன. சசிபாரதியை ராஜாஜியுடன் ஒப்பிடத்தூண்டுவன சில. நாங்கள் சிறுகதைகளேதான் எனவும் சில அடித்துக்கூறுகின்றன இடையே நாடோடிக் கதைகளிரண்டிற்குங் கூட எழுத்துருக் கொடுத்திருக்கிறார் ஆசிரியர். இந்த வார்ப்பி மணற்றுறுணி தடுக்கியது போன்று இக்கதைகளிலொன்றேனும் என் சகோதர மகா ஜனங்களிலொருவர் நெஞ்சிலாவது ஒரு சிறு கீறலை ஏற்படுத்துமாயின் அது என் மனத்திற்குப் பெரும் திருப்தி தருவதாய் இருக்கும்' என என்னுரை' பகுதியில் ஆசிரியர் கூறுவதானது உவமை பொருத்தமானதாய்ப் படாவிட்டாலும். அவரது இலக்கிய நோக்கை எமக்கு உணர்த்துகிறது.

கூர்ந்தநோக்கும் கலையாற்றலும் கொண்ட ஒரு எழுத்தாளனைக் காலங்கடந்துதான் இனங்காண முடிந்திருக்கின்றது. தன் ஆற்றலைப் பயிற்சி பண்ணிப் புடமிட்டுப் போற்றாமலிருந்தமைக்காகவும் நல்ல ஒரு கலைஞனை மறைத்து வைத்தமைக்காகவும் இலக்கிய உலகம் சசிபாரதியைக் குற்றவாளியாகக் காண்பது இயல்பே. எனினும் காலமின்னுமகடந்து விடவில்லை.

—தங்கதேவன்

# இந்தியாவில்' 'பட்டினிச்சாவு' கூக்குரல்!

விந்தியப் பிரதேசம்; அங்கிருந்து விந்தையான செய்தி ஒன்று வந்திருந்தது ஒரு மனிதன் பட்டினியால் செத்து விட்டதாகப் புகார் கிளம்பிற்று. பத்திரிகைகளிலும் பொதுக்கூட்டங்களிலும் காங்கிரஸ் எதிரிகள் அச்சம்பவத்தைக் கண்டபடி விமர்சித்து வெளுத்து வாங்கினார்கள்

விந்தியப் பிரதேச மந்திரி சபைக்கும் இந்த விடயம் கொண்டுவரப்பட்டது சம்பந்தப்பட்ட மந்திரி அப்பட்டினியால் இறந்ததாகக் சொல்லப்பட்ட மனிதன் வீட்டுக்கு விளம்பரப்படுத்தாமல் நேரில் சென்றார்,வீட்டிவிருந்தவர்களை விசாரித்தார். ''ஆமாம் வீட்டுக்காரன் செத்துட்போனான்'' என்றார்கள். ''எதனால் செத்தான?'' என்று மந்திரி கேட்டார். ''பட்டினியினால் செத்தான்'' என்றார்கள். மந்திரி தம் அநுதாபத்தைத் தெரிவித்து விட்டு வீட்டுக்காரனுடைய பிள்ளை குட்டிகளைப் பற்றி விசாரித்தார். பிறகும் சட்டென்று ' செத்துப்போனவனுக்கு அந்தியக் கருமங்கள் செய்தீர்களா?'' என்று கேட்டார்.

''ஆகா! செய்தோம்'' என்றார்கள்.

''இக்கருமகாரியங்களுக்குஉற்றார் உறவினர் வந்திருந்தார்களா?''

''ஆம் வந்திருந்தார்கள். ஐம்பது பேர் வரையில் வந்திருந்தார்கள்.''

''எல்லாருக்கும் விருந்து வைத்துத்தானே அனுப்பினீர்கள்?''

''ஆமாம், பின்னே சும்மா அனுப்புவோமா?''

''கரும காரியங்களுக்கு, ஐம்பதுபேர்களுக்குச் சாப்பாடு போடத் தானியம் இருக்கிறதே? பின்னே வீட்டுக்காரன் எதற்காக பட்டினியால் செத்தான்!'' என்று மந்திரி கேட்டார்.

செத்துப் போனவனைச் சேர்ந்தவர்கள் 'திரு திரு' வென்று விழித்தார்கள். பிறகு உண்மையைக் கூறினார்கள். ''சில பேர் வந்து பட்டினியால் செத்ததாகச் சொல்லச் சொன்னார்கள் அதனால் அப்படிச் சொன்னோம். வியாதியினால்தான் வீட்டுக்காரன் இறந்தான்'' என்றார்கள்.

நாடு முழுவதிலும் இவ்விதம் பட்டினிச்சாவுக் கூக்குரலிடும் அரசியல்வாதிகள் இருக்கிறார்கள். ஆந்தச்சென்னை,இராஜ்யத்திலவர்கள் இருக்கவேசெய்கிறார்கள். யாராவது எங்கேயாவது மூலைமுடுக்கில் வீழ்ந்து சாகமாட்டானா என்று கழுகு பார்ப்பதுபோல் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் உடனே ''இதோ ஒரு பட்டினிச்சாவு'' என்ற கூக்குரல் கிளப்புகிறார்கள். ''காங்கிரஸ் இராஜ்யத்தில் இந்த அக்கிரமம் நடக்கிறதா? மக்களே! எழுங்கள்'' என்று அலறுகிறார்கள்.

காங்கிரஸை எதிர்க்கவேண்டுமானால் வேறு நாகரிகமான வழிகள் இல்லையா? அதற்காகப்பட்டினிச் சாவுகளைக் கற்பனை செய்யவேண்டுமா?

ஓரிடத்தில் பட்டினிச் சாவு நேரிட்டதும் உடனே இந்தஅரசியல்வாதிகளுக்குத் தெரிந்து போகிறதே. அதை முன்னலேயே தெரிந்துகொள்ளக் கூடாதா? ஒரு கவளம் அன்னமோ ஒரு குவளை கஞ்சியோ கொடுத்துப் பட்டினியால் சாகப் போகிறவனைக் காப்பாற்றக்கூடாதா!

அப்படிச் செய்யமாட்டார்கள் செத்துப் போகிற வரையில் காத்துக்கொண்டிருந்து பிற்பாடு தான் ''ஆ, ஆ'' என்று அலறுவார்கள்

பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் வங்காளத்துப் பஞ்சத்தில் அறுபது லட்சம் ஜனங்கள் மடிந்து போனார்கள். சோவியத் ஆட்சியின் கீழ் ருஷியாவில் மூன்றுகோடிப்பேர்பஞ்சத்தில் மாண்டு போனார்கள். சீனாவில் உள்நாட்டுப்போர் நடந்து கொண்டிருந்த நாள்களில் எத்தனையோ லட்சம் மக்கள் பட்டினியால் செத்தார்கள் என்பது உலகமறிந்த செய்தி.

பாரத நாட்டில் காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்ட பிறகு உணவில்லாமை காரணமாக ஒரு ஜீவன் கூடச்சாகவில்லை. மழையில்லாமல் பஞ்சமும், அதிக மழையினால் வெள்ளப் பெருக்கும் பல இடங்களில் தோந்திருந்தும் மத்திய சர்க்காரும் சரி, மாகாண சர்க்கார்களும் சரி, அவ்வப்போது பிரம்மப் பிரயத்தனங்கள் செய்து மக்களைக் காப்பாற்றி வருகிறார்கள்.

(9-ம் பக்கம் பார்க்க)

**இந்திய ஆட்சியாளர்களுக்கு எதிராக இந்தியாவில் 'பட்டினிச் சாவு' என்று பிரசாரம் செய்வோரைக் கண்டித்து 1952 ம் ஆண்டு கல்கியில் வெளியான கட்டுரை இதுவாகும்.**

# கார்ட்டூன் ஓவிய உலகில் நான்

## சிரித்திரன் சிவஞானசுந்தரம்

**நான்** கொழும்பு வை. எம். சி. ஏ சிற்றுண்டி சாலையில் எனது சிங்கள நண்பர்களுடன் தேநீர் அருந்திக் கொண்டிருந்தேன். நான் மௌனமாக இருந்ததைப் பார்த்த நண்பருள் ஒருவர் "மிஸ்டர்சிவஞானசுந்தரம்.... இலங்கை பற்றி உங்கள் கருத்து என்ன" என ஒரு கேள்விக்கொழுக்கி போட்டு என்னைப் பேச்சில் இழுத்தார். நீண்ட காலமாக என் இதயத்தில் வெந்து கொண்டிருந்த உணர்வு அலை பொங்கி வடிந்தது. நண்பர்கள் பொதுவுடமைவாதிகளாக இருந்தபடியால் நான் என் கருத்தைப் பதுக்க விரும்பவில்லை "பெரும்பான்மை இனத்திற்கும் உல்லாசப் பிரயாணிகளுக்கும் இலங்கை ஒரு சுவர்க்கம் ... சிறுபான்மை இனமாகியதமிழருக்கு வருங்காலம் கண்ணீர் கதையாகும்..." என எனது மன வெக்கையைவெளிப்படுத்தினேன். அடக்கமாக என் பதிலைக் கேட்டவர்கள் "காரணம் யாது" என ஒரு கேள்விக்கணையை விடுத்தார்கள். நானும் தமிழ் இனத்தின் எதிர்கால ஆரூடத்தை அமைதியாகக் கூறினேன்.

"திரௌபதையின் துகில் போல் தமிழ் இனத்தின் உரிமைகள் உரியப்பட்டு வருகின்றன. மானம் பெரிதென வாழும் தமிழினம் உரிமை நீப்பின் உயிர் வாழாது" என்றேன். நண்பர்களின் இமைகள் நான் இயம்பிய பதில் கண்டு சுருங்கின.

அரசியல்தான் எமது கண்ணீர் கதையென்றால் எமது திரைப்படங்களும் கண்ணீர் கதையாகவே இருக்கின்றன. தமிழ் திரைப்படத் தயாரிப்பாளர்கள் ரசிகர்களின் கண்ணீரைப் பிழிந்தெடுப்பதில் பெரும் பயில்வான்களென்றே கூறவேண்டும். பராசக்திப் படம் பார்த்து விட்டு வீடு வந்தும் கண்ணீர் இறைத்த ஏழை மனசுகள் பலவற்றை நான் அன்று பார்த்ததுண்டு.

### சிரித்திரன் மலர்ந்தது

அரசியல், திரை எல்லாம் தமிழ் இனத்தை அரைத்துக் கொண்டிருக்கும் பொழுது அவர்களைச் சிரிக்கச்செய்ய முடியாதா என சிந்தித்தேன். அந்தக் கண்ணீர்க் களனியில் தான் சிரித்திரன் பூத்தது.

### பெரும் திரு சிரிப்பு

இறைவன் மனிதனுக்கு அருளிய பெரும் திரு சிரிப்பு, அவன் சிரிக்கும்போது அவன் முகம் திருமுகமாகின்றது. ஆகவேதான் இந்தச் சிரிப்புத் திருவை எண்ணி 'சிரித்திரன்' என்ற சஞ்சிகையை ஆரம்பித்தேன்.

"உத்தியோகங்களெல்லாவற்றையும் உதறித் தள்ளிவிட்டு நகைச்சுவைப் பத்திகை வெளியிடப்போகிறியா?" என எனது உறவினர் எள்ளி நகையாடினர் நண்பர்கள் சிலர் "பாலைவனயாத்திரைக்குப் புறப்பட்டு விட்டியா?" எனப் பரிகாசமும் பரிவும் கலந்து பேசினார்கள். "சஞ்சிகைகள் தொடர்ந்து வராத எமது மண்ணிலா உந்த விஷப்பரீட்சை?" என்றார் சிலர். விளம்பரம்தான் ஒரு பத்திரிகையின் முதுகெலும்பு, அந்த விளம்பர அதாரம் யார்தரப் போகிறார்கள்" என விளம்பினர் சிலர், மலை ஏறப்புறப்பட்டவனுக்கு பாரீசவாதம்வந்தது போல் இவர்களின் கருத்துக்கள் என்மனதை உளையச் செய்தது.

### இருவர் உற்சாகமூட்டினர்

இரு ஆழமான அடக்கமான நண்பர்கள்மட்டும உற்சாகம் தந்து உரமூட்டினர்கள், ஒருவர் பண்டிதர் வீரகத்தியவர்கள் மற்றவர் அமரர் அ. ந. கந்தசாமியவர்கள் அவர்களின்ஆசீர்வாதத்துடன் எனது துணைவியாருடைய துணையுடனும் பத்திரிகையாத் திரையைத் தொடங்கினேன் படைப்பாளிகள்தான் தாராளமாக விஷயதானம் சஞ்சிகைக்குத்தந்தாலும் வர்த்தகர்கள் விளம்பரம் தருவார்களா எனச்சித்தம் குழம்பினேன். லட்சியத்தில் வெற்றி என்பது தங்கத்தாம்பாளத்தில் தாம்பூலத்துடன் வைத்துத் தரப்படும் பரிசல்ல என உணர்ந்தேன். மனம் தளராது விளம்பரம் சேகரிக்க வீதியில் இறங்கினேன் முதல் முதலாக எனக்கு வீடு வாடகைக்குத் தந்த ஆனந்த லேகியம் உரிமையாளர் ராஜாமணியிடம் போனேன். அகமும் முகமும் மலர்ந்து என்னைக் குளிர்பானமும் தந்து குளிரவைத்தார். என்னைஉபசரித்தவரை எப்படி விளம்பரம்கேட்பதென என் மனம் போர்க்களமானது. என் முகம் "ஷவர் பாத்" போல் வியர்த்து வடிந்தது.

'என்ன வியர்த்துக் கொட்டுது முகம், உள்காச்சல் ஏதும் இருக்கிறதா என்றார் ராஜாமணியவர்கள். நான் வந்த காரணத்தை மானசீகமாக உணர்ந்துதான் இப்படிக்கேட்கிறார் என்ற பீதியில் நான் வந்தவிடயத்தைக் தளதளக்க எடுத்துக்கூறினேன் "நான் ஒருசஞ்சிகை ஆரம்பிக்கிறேன், உங்கள் விளம்பர ஆதரவு வேண்டும்" என்றேன். 'தாராளமாகப்போடுங்கள், தொடர்ந்துபோடுங்கள் நீங்கள் வீட்டு வாடகைப் பணம் தரவேண்டாம். நீங்கள்பிரசுரிக்கும் விளம்பரமே எனது வீட்டுவாடகையாகத்தரும் பணம்" எனத் திருவாய்மலர்ந்தார். நன்றி கூறிக்கொன்டு வீதியில்இறங்கினேன் நான் நடப்பதுபோல் தென்படவில்லை பறப்பது போல் தென்பட்டது. இப்படியாகவிளம்பரங்கள் சேர்ந்து நகைச்சுவை விஷயஅடக்கத்துடன் சிரித்திரனை சுதந்திரன் அச்சகத்தில் அச்சிடக்கொடுத்தேன். அச்சுவாகனமேறி சஞ்சிகை மலர்ந்தசிரித்திரன்இதழ்களை காறில்ஏற்றிகடைகளுக்கு விநியோகம் பண்ணுவதற்குப் புறப்பட்டேன். அப்பொழுது பண்டாரநாயக்கா வீதியிலுள்ள முருகனும் வாகனமேறி ஊர்வலம்போவதற்கு என் முன்பாக வந்து கொண்டிருந்தார். சிரித்திரனை ஆசீர்வதிக்க முருகன் முன்வந்தது போல் தோன்றியது.

தரமானசஞ்சிகை அச்சிடுவது சுலபம் நண்பர்குழாம்எம்மைக் காதுகுளிரப் பாராட்டலாம் ஆனல்அதன்விநியோகத்

(10 ம் பக்கம் பார்க்க)

# இந்தியா...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

**ஒருவிதத்தில்பார்க்கப்போனால்** வியாதகளினால் சாகிறவர்களும் முடிவில் பட்டினியால் சாகிறார்கள் என்றே சாதித்து விடமுடியும் நோயாளிகளுக்குக் கடைசிக்காலத்தில் எந்த உணவும் ஒத்துக்கொள்வதில்லை. முதியவாகளும் அப்படியே. ஆகவே காலமாவதற்கு முன்னால் அவர்கள் பட்டினி கிடக்க நேரிடுகிறது ஆகையால் எல்லாச் சாவுகளையும் 'பட்டினிச் சாவு' என்றே சொல்லிவிடலாம்

மற்றபடி உணவுகிடைக்காத காரணத்தினல் ஒருவன் பட்டினி கிடந்து இறந்தான் என்பது எளிதில் நம்பக்கூடியதே அல்ல.

இந்த நாட்டில் கருணை உணர்ச்சியும் தர்மசிந்தனையும் அவ்வளவாக வரண்டுபோய் விடவில்லை.

நன்றி: 'கல்கி'
1952

## அறத்தோடுசார்ந்த தொண்டு புரிந்தார்

சீர்பெறு ஊரெழுகிராமத்தின் உத்தமரான திரு. ஏ. வி. கிருஷ்ணபிள்ளை அமரத்துவமடைந்துவிட்டார். யோகர் சுவாமிகளின் வாக்குப்படி இது எப்பவோ முடிந்த காரியம் என ஆறுதலடைவோம்.

பலவளங்கள் பொருந்திய சிறப்பான குடும்பத்தில் உதித்தபோதும் 'திரைகடல் ஓடியும் திரவியம்தேடு' என்ற முதுமொழிக்கிணங்க மலேயா நாடுசென்று கருமத்தில் ஈடுபட்டார்.

தாயகம் திரும்பியபின் மலேயாவில் தான்பெற்ற அனுபவத்தைக் கொண்டு நாவலப்பிட்டி தாமரைவல்லி பெருந்தோட்ட உரிமையாளனுகி சிறப்போடு வாழ்ந்தார். தான் ஈட்டிய பொருளை தான் மட்டும் பயன்படுத்தாமல் சுற்றத்தவர்கட்கும் தன்னை நாடி வந்தவர்கட்கும் பயன்படும்படி வாழ்ந்தார்.

நாவலப்பிட்டியில் பெருந்தோட்ட உரிமையாளனாக வாழ்ந்தபோதும் மலைவாழ் தமிழரின் கல்வி, ஆத்மீக முன்னேற்றத்தில் அக்கறைகொண்டிருந்தார். நல்ல தமிழனாகவும் சிறந்த சைவனாகவும் வாழ்ந்து அறத்தோடு சார்ந்த பலதொண்டுகளுக்கு முன்னின்று உதவினார்.

அவர்தமதுவாழ்வின்இறுதிப் பகுதியில்மிகவும் அமைதியான வாழ்வையே மேற்கொண்டிருந்தார். உறுதிவாய்ந்த உள்ளம் அதைக்காட்டும் உயர்ந்த உடல்வாகு இவ்விரண்டையும் அணிசெய்த ஆளுமையுடைய தோற்றம் எல்லோரையும் கவர்ந்தது.

பேசுவதற்கும், சைவம் பேணுவதற்கும் ஊரெழு வீர பத்தி விநாயகனுக்கும் இனியவராய் வாழ்ந்தார். தொண்டுக்கும் பக்திபூண்டவருக்கும் உறுதுணையாயிருந்தார். மருத்துவ மனைக்குச் செல்லாமல் மனைவி மக்களுக்கு சிரமம் கொடுக்காமல் இறைவனே விரும்பும் வைகறைப் பொழுதில் தனது காயத்தை ஒரு நொடிப்பொழுதில் ஒடுக்கிக் கொண்டார். ஊரும் சுற்றமும் ஒன்றுகூடி அஞ்சலிசெய்ய பல்துறை மக்களும் பங்கு கொண்டு அன்னாரது இறுதி யாத்திரையை சிறப்பித்தது அவர் சமூகத்தில் பெற்றிருந்த நன்மதிப்பிற்கும் அன்பிற்கும் ஓர் முத்திரையாகும்.

ஊரெழு
க. முத்துக்குமாரசாமி


## பிரதேச அபிவிருத்தி அமைச்சு

# தமிழலுவற் பிரிவு

தமிழ் இலக்கிய, கலை, கலாசார கழகங்களைப் பதிவுசெய்து அவை பற்றிய விபரங்களைத் தொகுத்துக்கொள்ளப் பிரதேச அபிவிருத்தி அமைச்சு முடிவு செய்துள்ளது.

எனவே தமிழ் இலக்கிய, கலை, கலாசாரக்கழகங்கள், மன்றங்கள் ஆகியன தம்மைப்பற்றிய விபரங்களைக் கீழ்க்காட்டியது போன்றதொரு படிவத்தில் அனுப்புமாறு வேண்டப்படுகின்றன. அனுப்பவேண்டிய அஞ்சல் முகவரி:

**தமிழலுவற் பணிப்பாளர்,**
பிரதேச அபிவிருத்தி அமைச்சு,
244, காலி வீதி, கொழும்பு-04.

அஞ்சலுறை மேல் இடதுபுற மூலையில் 'தமிழ்க் கலை மன்றம்' என்ற வாசகம் பொறித்திருத்தல் வேண்டும்.

ம. இராசநாயகம்,
தமிழலுவற் பணிப்பாளர்,
பிரதேச அபிவிருத்தி அமைச்சு,
244, காலி வீதி, கொழும்பு-04.

## மாதிரிப் படிவம்

### கலாசார சங்கங்களைப் பதிவுசெய்தல்

01. சங்கத்தின் பெயர்:-
02. சங்கம் நிறுவிய நாள்;- (ஆண்டு, மாதம், நாள்)
03. சங்கப் பணியக அஞ்சல் முகவரி:-
04. சங்கத்தின் நோக்கங்கள்:-
05. சங்க உறுப்பினர் எண்ணிக்கை;-
06. இதுவரை நடந்த ஆண்டுப் பொதுக்கூட்டங்களின் எண்ணிக்கை:-
07 கடைசியாக ஆண்டுப் பொதுக்கூட்டம் நடந்த நாள்:-
08. சங்கம் ஆற்றும் பணிகள்:-
09. இதுவரை சங்கம் சாதித்தவை:-
10. சங்கக் கூட்டக் குறிப்புகள் ஆவணப்படுத்தப் பட்டுள்ளனவா:-
11. சங்கத்துக்கு வங்கிக் கணக்குண்டா:-
12. வங்கிக்கணக்கு உண்டாயின் வங்கிக்கிளையும், கணக்கு எண்ணும்:-
13. சங்கத் தலைவரின் பெயரும், அஞ்சல் முகவரியும்:-
14. சங்கச் செயலாளரின் பெயரும், அஞ்சல் முகவரியும்:-
15. சங்கப் பொருளாளரின் பெயரும், அஞ்சல் முகவரியும்:-
16. பிற விபரங்கள்:-

மேலே தந்துள்ள விபரங்கள் சரியானவையென உறுதிப்படுத்துகின்றேன்.


..............................
செயலாளர்

(ஏ 149)



## STUDY ABROAD

U.K./U.S.A./
W. Germany/
Singapore/
Malaysia
Japan




Cyprus
[Cheapest & all Colleges affiliated to U.K./U.S.A. recognised Universities/ Institutes].

* Engineering, Business studies, Computer, Law, Accountancy, Eelctronics, Hotel Management, Architectural, Marketing, Secretarial, Quantity surveying, Languages, Professional exams, Modelling, Hair dressing, BA, BBA, MBA, BSC, Diplomas etc.
* Accommodation/Meals Provided by Colleges.
* Advice given on vacation jobs too.
* Excellent references available from Students/Parents.
* Full course fees from Rs. 10,000/- & above.
* Currency Permits/Visas will be arranged & FREE ADVICE given.

**Consult: Preethiraj Weeraratne,**
**MBA (LOND), FABE, FCIM, FAAI, FISTM, MBIM, Dip, Accy (Lond).**

**Weeraratne & Co**
65, Jawatta Road, Colombo 7.
Tele: 500736, (24 hrs. Answer Service).
Kandy: No 3, Wattarantenna Road, Kandy.
(Official Representatives affiliated to many Colleges/ Universities/ Insututites abroad)

dave 1721

## முக்கிய அறிவித்தல்

சிவன் வைத்தியசாலை முறிவுநெரிவு வைத்திய நிபுணர் மலையாள வைத்தியர் த. சோமசுந்தரம தொடர்ந்தும் இல. 352. காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் அதே இடத்தில் வைத்தியம் செய்கிறார் என்பதைப் பொதுமக்களுக்கு அறியத் தருகிறேன்.

டாக்டர் த. சோமசுந்தரம்,
முறிவு நெரிவு வைத்திய நிபுணர்,
352, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். [சி-9717]



பிரதேச அபிவிருத்தி அமைச்சு

## விபுலானந்தர் அடிகள் இசை நடனக் கல்லூரி

இராமகிருஷ்ணபுரம், மட்டக்களப்பு.

மட்டக்களப்பு விபுலானந்தர் அடிகள் இசை நடன கல்லூரியில் இசைக்கலைமாமணி/நாட்டியக்கலைமாமணி நான்காண்டு நெறியில் பயிலுவதற்கு மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் அழைப்பாகின்றன.

மாணவர் அனுமதிக்கான விதிகள்:-

(1) பாடநெறிகள்:-

கீழ் குறிக்கப்படும் நான்காண்டு காலப் பாட நெறிகள் நடைபெறும்.

1. வாய்ப்பாட்டு
2. வயலின்
3. வீணை
4. மிருதங்கம்
5. பரதநாட்டியம்
6. புல்லாங்குழல்

மாணவர் ஒருவர் மேலே நிரல்படுத்தியுள்ள துறைகளில் ஒன்றையும் துணைப் பாடமாக மற்றொன்றையும் தெரிவுசெய்ய வேண்டும். வாய்ப்பாட்டுத் தவிர்ந்த ஏனைய பாடங்களைச் சிறப்புப் பாடமாகத் தேர்ந்தெடுப்பவர் வாய்ப்பாட்டினையே துணைப் பாடமாகக் கொள்ளல் வேண்டும். ஒன்றுக்குமேற்பட்ட பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கமுடியாது.

(2) மாணவர் தெரிவு:-

செய்முறைத்தேர்வு, எழுத்துத்தேர்வு ஆகியவற்றின் மூலம் மாணவர் அனுமதிக்கு தெரிவு ஆவார். தேர்வு கல்லூரியிலேயே நடைபெறும். தேர்வில் அனுமதி கிடைத்தபின்னர் தெரிவுசெய்யப்பட்ட துறையில் இருந்து மாற்றம் செய்யமுடியாது.

(3) தகைமைகள்:-

அ. ஒரேதடவையில் கல்விப்பொதுத் தராதர சாதாரண தேர்வில் தமிழ்மொழி, கணிதம், சங்கீதம்/நாட்டியம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஆறுபாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

தேசிய கல்விப் பொதுத்தராதரப் பரீட்சையில் ஒரே தடவையில் தமிழ்மொழி, கணிதம், சங்கீதம்/நாட்டியம் ஆகியவற்றை உள்ளடக்கிய எட்டுப்பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

சங்கீதம், நடனம் க. பொ. த. பரீட்சையில் சித்தியடையாதவர்கள் வட-இலங்கைச் சங்கீதசபை பரீட்சையில் மூன்றும் ஆண்டு சித்தியடைந்திருத்தல் அவசியமானது.

ஆ. வயது:-
விண்ணப்பதாரி 1987-08-31 அன்று 15 வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்ட வயதினையுடைய இலங்கைக் குடிமகன்/குடிமகள் ஆதல்வேண்டும்

(4) அ. விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:-

முதல்வர்,
விபுலானந்தர் அடிகள்
இசை நடனக் கல்லூரி,
கல்லடி, மட்டக்களப்பு.

ஆ. விண்ணப்பங்களை அனுப்பும் அஞ்சல் உறையில் இடதுபுற மேற்பக்கத்தில் ''இசைக்கலைமாமணி''/''நாட்டியக்கலைமாமணி'' நெறிக்கு விண்ணப்பம் என்ற சொற்கள் பொறித்திருத்தல் வேண்டும்.

இ. விண்ணப்பங்களை ஏற்கும் இறுதிநாள் 1987 ஒகஸ்ட் 31ஆம் நாள்.

விண்ணப்பப்படிவங்களை விபுலானந்தர் இசைநடனக் கல்லூரி அலுவலகத்தில் ஒன்றுக்கு ரூபா 5/- செலுத்தி தபால் மூலமாகவோ, நேர்முகமாகவோ பெற்றுக்கொள்ளலாம். தனிப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ம. இராசநாயகம்,
தமிழலுவற் பணிப்பாளர்,
பிரதேச அபிவிருத்தி அமைச்சு.

[எ-148]


வன்செயல்களினால்

# பாதிக்கப்பட்டுள்ள ஏனைய மாவட்ட மக்களுக்கும் இந்திய உதவி தேவை

## இந்திய தூதரக அதிகாரியிடம் யாழ். ஆயர் கையளித்த மகஜர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ் மாவட்டத்தில் மட்டுமன்றி மட்டக்களப்பு, அம்பாறை, திருமலை, வவனியா, மன்னார், முல்லைத்தீவு கிளிநாச்சி ஆகிய இடங்களிலிருந்தும் பாதுகாப்பு உறைவிடம், உணவுதேடி மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். இந்த மக்களுக்கு ஏதாவது ஒரு வகையில் நிவாரணமளிக்க வேண்டியது இன்றியமையாததாகின்றது. யாழ் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய இந்தியா எடுத்துள்ள நடவடிக்கையையிட்டு நன்றி செலுத்தும் அதேவேளை ஏனைய மாவட்டங்களுக்கும் இந்திய உதவியை ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

இவ்வாறு தற்போது யாழ்ப்பாணம் வந்துள்ள இந்திய தூதரக முதன்மைச் செயலர் திரு. எச். எஸ். பூரியிடம்யாழ் மாவட்டஆயர்அதிவணதியோகுப்பிள்ளை சமர்ப்பித்த மகஜரில் கோரிக்கை விடுத்துள்ளார்.

இம் மகஜரின் விபரம் வருமாறு:-

எமது மக்கள் சொல்லொணாத் துன்பநிலைக்கு ஆளாகியுள்ள இச் சந்தர்ப்பத்தில் எமக்கு மனிதாபிமான உதவிகளை வழங்க இந்திய மக்களும் இந்திய அரசும் எடுத்துள்ள தீர்மானத்தை நாம் மனமாரப்பாராட்டுகின்றோம். துன்பப்படும் மக்களுக்கு ஆதரவளிக்கும் இந்தச் செயல் மனிதநேயததுக்கு இந்தியா வைத்துள்ள உயர் மதிப்பையே காட்டுகிறது.

### தமிழர் முயற்சி பயனளிக்கவில்லை

இந்த நாட்டில் தமிழ் மக்கள் கொண்டுள்ள நியாயபூர்வமான குறைபாடுகளை தீர்க்கவும், சம உரிமைபெறவும் அவர்கள் மேற்கொண்டு வந்த முயற்சிகள் யாவும் பலனற்றுப் போயுள்ளன. 48ம் ஆண்டு முதல் தமிழ்த்தலைவர்கள் பாராளுமன்றத்தில் தமக்குரிய உரிமைகளைத் தருமாறு மன்றாடியுள்ளனர். பொதுவிடங்களில் அமைதிப் போராட்டம் நடத்தியுள்ளனர்; ஆயினும் பலன் கிடைக்கவில்லை. தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் தாமளித்த வாக்குறுதிகளை பல்வேறு நெருக்குதல்கள் காரணமாக நிறைவேற்ற முடியாமல் இருந்தது.

தமிழரின் நியாயமான அபிலாசைகளைம் சட்டபூர்வ கோரிக்கைகளையும் திருப்திப்படுத்தும் விதத்தில் இப் பிரச்னைக்கு அரசியல் தீர்வொன்று காண இந்திய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளை நாமறிவோம்

### தமிழர் கொலைகள்

இந்தப் பிரச்னையைத் தீர்க்க வன்செயல்களைப் பயன்படுத்துவதனை நாம் கண்டனம் செய்து வந்ததன் மத்தியில், சமாதான உடன்படிக்கையொன்றைக் காண ராணுவத்தீர்வுக்கு முயல்வதைத் தவிர்க்க வேண்டும் என இந்தியா வலியுறுத்தியதற்கு மத்தியில், இலங்கை ராணுவம் தனது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியது. இதனால் பல தேவாலயங்கள் கோயில்கள் வீடுகள் சேதப்படுத்தப்பட்டதுடன் நூற்றுக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டும் காயமடைந்துமுள்ளனர்; அத்துடன் ஆயிரக் கணக்கான மக்கள் தமது வீடுகளை இழந்துள்ளனர்.

(11ம் பக்கம் பார்க்க)

### இலங்கை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

போர் நடத்துகின்றது. சர்வதேச உதவிகளை மட்டும் இலங்கை அதிகாரிகள் தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்ப மறுக்கிறார்கள் என்பதில்லை; மனித உரிமைச்சட்டங்களுக்கு மாறாக உணவு, மருந்து வகைகள் அங்கு கொண்டுபோகப்படுவதையும் தடைசெய்துள்ளனர். தடைகளை விதித்ததின்மூலம் மக்களுக்கு அடிப்படைத் தேவைகள் மறுக்கப்பட்டுள்ள ஒரு நிலைமையில் இந்தியா போன்ற நாடுகளோ, சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கமோ நிவாரணப் பொருள்களை அனுப்புவதற்கு இலங்கை அரசின் அனுமதியைப் பெற வேண்டிய அவசியமில்லை என்று திருமதி பார்க்கர் கூறினார்.

இலங்கைப் படையினருக்கு பாகிஸ்தானில் பயிற்சியளிப்பது பற்றிகுறிப்பிட்ட அம்மையார், இலங்கைக்கு உதவிபதின்மூலம் பாகிஸ்தான் சர்வதேசச்சட்டங்களையும், ஜெனிவாஒப்பந்தத்தையும் மீறியுள்ளது என்றார். பாகிஸ்தானுக்கு உதவியளிக்கும் நாடுஎன்ற முறையில்அமெரிக்கா சர்வதேச சட்டத்தை மீறுமலிருக்கலாம். ஆனல் குற்றம்புரியும் ஒருநாட்டுக்குஉதவிபுரிகின்றது என்றார்.

கலிபோர்னியாவைச்சேர்ந்த காங்கிரஸ் சபை உறுப்பினர் திரு மெர்வின் எம். டிமலியால் ஒழுங்குசெய்யப்பட்ட இக்கூட்டத்தில் அவர் கருத்துவெளியிகையில், அமெரிக்கபத்திரிகைகள் இலங்கையில் நடக்கும் விடயங்கள் பற்றிய முழுவிபரங்களையும் அமெரிக்க மக்களுக்கு வெளியிடுவதில்லை என்றார்.

ஆஸ்திரேலியாவைச்சேர்ந்தவரும் மனிதஉரிமை போராளியுமான டாக்டர் பிரியான் செனவிரட்ன பேசும்போது ஒரு சிங்களவன் என்றமுறையில் தமிழ்-சிங்கள மக்கள் கொல்லப்படுவது குறித்து கவலைகொள்கின்றேன் ஆனல் தமிழ்மக்களே அதிகமாகக் கொல்லப்படுவதால் அவர்களுக்காகவே அதிகமாகக்கவலைப்படுகிறேன் என்றார்.

நாட்டில் மிகத்திறமை நிலைப்பட்டிருந்த ஜனநாயக அமைப்பைக் குலைத்துவிட்டதாகவும் சர்வாதிகாரத்தை நிலைநாட்ட முயற்சிக்கப்படுவதாகவும் திரு. ஜயவர்த்தனவை அவர் கண்டித்தார்.

சர்வதேச மன்னிப்புச்சபையைச் சேர்ந்த திருமதி எஸ்ட்ரலேட் ஜோன்ஸ் பேசும்போது இலங்கையில் 500 தமிழர்கள் காணமல் போயுள்ளதுபற்றி குறிப்பிட்டார். பாதுகாப்புப் படையினரின் பாதுகாப்பில்இருக்கும் போதுதான் இவர்கள் காணமல் போயுள்ளார்கள் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். இலங்கை அரசாங்கம் சித்திரவதைக்கு எதிரான சட்டம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது ஆனல் தமிழ்பகுதிகளில் கைதுசெய்யப்படுபவர்கள்மீது மிகக் கடுமையான விதத்தில் சித்திரவதைகளை மேற்கொள்கின்றது என்றார்.

### முழுமையான

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வனங்கள். இவை மக்களின் சமுதாயத்தை கற்றுக் கொண்டே இருக்கவைக்கும் சக்திகொண்டவை.

நூலகம் சென்று பலநூல்களையும் படிக்கும் பொழுது தீர்க்கதரிசிகள், தத்துவஞானிகள் அறநெறிச்சான்றோர்கள். பேரறிவாளர்கள் போன்ற கிட்டற்கரிய சான்றோர்களை நேரிற்கண்டு உரையாடும் உணர்வை நாம் பெறமுடியும்.

பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு சபா. ஜெயராசா பேசுகையில்:

''பொருட்களைச் சேகரிப்பது போல புத்தகங்களை சேகரிக்கும் பண்பு நம்மிடம் இல்லை ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தது 50 அறிவுநூல்களையாவது சேகரிக்கவேண்டும். இதுநம் கிராமத்துக்கு சிறப்பைதருவதாக அமையும். சிறுவர் நூலகம் அமைக்கும் பணி உலகெங்கும் பரவிவருகின்றது எமது கிராமத்திலும் சிறுவர் நூலக பிரிவுகளை ஆரம்பிக்க வேண்டும் எப்பொழுதும் வாசித்துக்கொண்டிருப்பவன் என்றும் இளமையுடையவனாக இருப்பான் என்று குறிப்பிட்டார்.

பண்டிதர் இராசையா திரு. செல்லப்பா ஜெயக்குமார், திரு இரா. குகவரதன், பிரம்மஸ்ரீ வீரமணிஐயர் உட்பட பலரும் உரையாற்றினார்கள். பரதநாட்டிய நிகழ்ச்சியும் நடைபெற்றது. (மா)

### இவ்வாரம்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்கும், தொழில் சமவிருத்தி வாழ்விலும் புதிய நம்பிக்கை உதயமாகலாம், எதையும்சிறப்புடன் செயலாற்ற விரும்புவீர்கள்.

திருமலை ரவீந்திரன்

### இந்திய

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வருவதுண்டு. ஆனல் இங்கு ராஜீவ் காந்தியவர்களது தலைமைக்கு உடனடி ஆபத்து இருப்பதாகத் தெரியவில்லை.

தகவல்: கலாநிதி திரு. நீலன் திருச்செல்வம் வீரகேசரிக்களித்த பேட்டியிலிருந்து எடுக்கப்பட்டது.

### கார்ட்டூன்

(9ம் பக்கத் தொடர்ச்சி)

திலேயே அதுவெற்றி தோல்வியைத் தழுவுகின்றது. இந்த விநியோகங்களை தெரியாததால் எத்தனையோ சஞ்சிகைகள் சுவடுதெரியாமல் மறைந்திருக்கின்றன. வாணியின் கடாட்சத்துடன் ஒரு சிறந்த பத்திரிகை வெளியிடலாம் ஆனல் அதுவெற்றி நடைபோட வாணிப அறிவும் தேவை. (தொடரும்)

வெல்லாவெளி முகாம்------

## கமாண்டோமூவர் புலிகளின் கண்ணிவெடியால் பலி!

யாழ்ப்பாணம், ஞாயிறு

வெல்லாவெளி இராணுவ முகாமிலிருந்து களுவாஞ்சிக்குடிக்கு கால் நடையாகச் சென்றகமாண்டோக்கள்தமது கண்ணிவெடியில் சிக்கியதையடுத்து 3 கமாண்டோக்கள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதாக தமிழீழவிடுதலைப் புலிகளின் அறிக்கையொன்று தெரிவிக்கிறது

கடந்த 8ம் திகதி மாலை இக் கண்ணிவெடித் தாக்குதல் இடம்பெற்றது. இத்தாக்குதலின் போது மூன்று கமாண்டோக்கள் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வடகைகில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தைக் கொண்டு இன்னுமோர் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தை மாத்திரமல்ல முழு நாட்டுக்குமே தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்திருக்க முடியும் என்று கூறிய

அலயசசா, ஏகாதுபததயவா திகள் எமக்குள் உருவாக்கி விட்டுச்சென்ற வாதபேதங்களை மறந்து ஒரேதேசம் என்ற வகையில இந்த நாட்டில் நாம் வாழவேண்டும் என்பதை வடபகுதி இளைஞருக்கு உணர்த்த வேண்டும் என்றும் கூறினர்.

இரண்டாயிரம் ஆண்டு காலம் சிங்களவரும், தமிழரும் ஒன்ருக வாழ்ந்திருக்கிறுர்கள் ஆனல் அப்பாவிகளான தமிழ் - சிங்கள மக்களின் சடலங்களின் மேல் நடந்து அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்காக அரசியல் வாதிகள் பேதங்களை உருவாக்கியிருந்துள்ளார்கள் என்று அமைச்சர் மேலும் கூறினர்.

## பாதிக்கப்பட்டுள்ள

(10ம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் பல்வேறுதடை வலயங்களாலல் மக்கள்தமது சொந்தப்பூமியில் அகதிகளாகியுள்ளதுடன் பட்டினிச் சாவை எதிர்நோக்கவேண்டிய நிலைக்காளாகியுள்ளனர். ஆஸ்பத்திரிகள்மீது மேற்கொண்டுள்ள தாக்குதல்களினுலும். மருந்துப் பொருட்கள் கொண்டுவருவதில் ஏற்பட்டுள்ளதடங்கல்களினுலும் காயமடைந்தோர்படும் இன்னல்கள் அதிகரித்துள்ளன

## கல்வி பாதிப்பு

பாடசாலைக் கட்டிடங்கள் சேதப்படுத்தப்பட்டு வருவதாலும், பாடசாலைகளில் ராணுவம் முகாமமைத்து வருவதாலும் எமது மாணவரின் கல்வி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது நூற்றுக்கணக்கான பாடசாலை மாணவரும், இளைஞரும் கைது செய்யப்பட்டுச் சித்திரவதை செய்யப்படுவதும் 'அம்னெஸ்ரி இன்டர்நஷனல்' சுட்டிக்காட்டியது போன்று, அவர்கள் 'காணுமற்போகும்' நிகழ்ச்சிகளும் எமது மக்களில் ஒரு தலைமுறைக்கு முற்றிலும் பெரும் ஆபத்தை விளைவித்துள்ளது இச்சம்பவங்கள் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி ஏனைய வடமாவட்டங்களிலும், கிழக்கு மாகாணத்திலும் இடம்பெற்றுள்ளன. இப்பகுதி மக்களும் பாதுகாப்பு, உணவு, உறைவிடம் தேடி இடம்பெயர்ந்துள்ளனர். எனவே இவர்களுக்கும் நிவாரணம் வழங்குவது இன்றைய தேவையாகிறது.

பாதிக்கப்பட்ட இடங்களுக்கு வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும், சூடா நாட்டிலிருந்து வெளியிடங்களுக்கான தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருப்பதாலும் இங்கு என்ன நடக்கின்றதென்பதை வெளியுலகு அறிய முடியாதுள்ளது

இந்த நிலையில் நாம் மேலே குறிப்பிட்டபடி பாதிக்கப்பட்டுள்ள மக்கள் வாழும் ஏனைய மாவட்டங்களுக்கான உதவிகளையும், ஆகாய மற்றும் பல்வேறு தாக்குதல்களினின்று எம்மைக் காப்பாற்றவேண்டும் என்றும் இந்தியாவிடமிருந்து எதிர்பார்க்கின்றேம். [ஊ]

## பல்கலைக்கழகங்களில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வகுப்புக்களைப் பகிஷ்கரித்தல் மூலம் பல்கலைக்கழகச செயற்பாடுகளைத் தடைசெய்தல், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மீது பலாத்காரம் பிரயோகித்தல் போன்ற நடவடிக்கைகளில் இறங்கும் சமயங்களில் பல்கலைக்கழகங்களை மூடிவிடுவதென முடிவு செய்யப்பட்டிருப்பதாக அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அவ்வாறு பல்கலைக்கழகங்களை மூடும்போது இருமாதங்களுக்கு மூடியபின்னர் மாணவர்களிடம் ஒப்பந்தம் ஒன்றைப் பெற்றுக்கொண்டதின் பின் மீண்டும் திறக்கலாம் என ஒரு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாம்.

## சூடா நாட்டு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இயங்கிவரும் அரசினர் வைத்திய சாலைகளுக்கும் யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தினர் வழங்கவுள்ளனர்.

மருந்து வகைகளில் 20 சதவீதமானவற்றை யாழ். மாநர சபையின் அதிகாரத்துக்குட்பட்ட மருந்துச்சாலைகளுக்கும் மனிதமுன்னேற்ற நிலையத்தினரால் பராமரிக்கப்பட்டுவரும் மருத்துவ நிலையங்களுக்கும் வழங்கப்படவுள்ளன.

தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை மற்றும் தனியார் வைத்திய நிலையங்கள் இலவசமாக வைத்திய சேவை செய்ய விரும்பின் யாழ். செஞ்சிலுவைச்சங்கத்தினருடன் தொடர்பு கொண்டால் அவர்களுக்கும் இந்த மருந்து வகைகள் வழங்கநடவடிக்கை எடுக்கப்படுமென்று யாழ். செஞ்சிலுவைச்சங்கப்பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (வா)

## ஐலன்ட்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

உணவுக்கப்பல் மூன்று தினங்களுக்குப்பின் நேற்று பிற்பகல் துறைமுகத்திற்குள் நுழைய இராணுவத்தினரால் அனுமதி வழங்கப்பட்டது.

இந்தக் கப்பலில் உள்ள உணவுப் பொருட்கள் இறக்கும் வேலைகள் இன்று ஆரம்பிக்கப்படலாம். எனத் தெரிய வருகிறது. (வா)

# வியாபாரிகள் பொருள்களை நியாயவிலைக்கு விற்கவும்

## ஆணையாளர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

வர்த்தகர்களும், சந்தை வியாபாரிகளும் ஏனைய விற்பனையாளர்களும் பொருள்களை நியாயமான விலையில் விற்பனை செய்யும்படி உள்நாட்டு வியாபார உதவி ஆணையாளர் திரு. சி த. மார்க்கண்டு வேண்டுகோள் விடுத்துள்ளார்

இது சம்பந்தமாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கட்டுப்பாட்டு விலைக்குள்ளான பொருள்களை அவ்விலைக்கே விற்க வேண்டும். உச்ச சில்லறை விலைகள் குறிக்கப்பட்ட அவ்விலைக்கு மேற்பட விற்கலாகாது. விலைப்பட்டியலை வியாபார நிலையத்தில் வெளியே நுகர்வோர் பார்க்கும்படியாக வைத்திருத்தல் வேண்டும். சாமான் பட்டைகளில் பொருள்களின் விலை குறித்த அட்டைகள் குத்தி வைக்கப்படல் வேண்டும்.

தராசுகள். கிலோப்படிகள், மீட்டர்கோல்கள், லீற்றர் கொள்கலன் பாத்திரங்கள், நடப்பாண்டில் உபயோகிப்பதற்கு முத்திரை [சீல்] வைக்கப்பட்டனவாக இருக்கவேண்டும்.

உணவுப்பண்டங்கள் வைத்து விற்பனை செய்யும் வர்த்தகர்கள் நிலையத்தில், அதே அறை களஞ்சியத்தில் உரவகைகள். பசளை, சிமெந்து. கிருமிநாசினி வைத்திருக்கப்படாது.

மாடுகள் இறைச்சிக்கு சுகாதரப்படி சிபார்சு செய்யப்பட்டபின், மாட்டுச்சொந்தக்காரரின் உடமைப்பத்திரம் இறைச்சிக்கடைக்காரரிடம் இருந்து பெறப்பட்டபின் அதனை வழங்கிய உதவி அரசாங்க அதிபரிடம் சேர்ப்பிக்கப்படவேண்டும். இதனை கால்நடைவைத்தியர் அல்லது சுகாதாரப் பரிசோதகர் செய்வார்.

இப்படிச் செய்வதினுல் மாடுகள் இறைச்சிக்காக களவு போவது தடைப்படும்.

பாவனையாளர்களும் நுகர்வோரும் அத்தியாவசியப் பொருள்கள் விற்பனைக்கில்லாது இருப்பின் அல்லது கட்டுப்பாடாக இருந்தால் அது பற்றி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தலைவர் பொதுமுகாமையாளர், உதவி அரசாங்க அதிபர், உள்நாட்டு வியாபாரத் திணைக்கள மாவட்ட கந்தோர் ஆகியவற்றுக்கு அறிவிக்கவேண்டும்.

## இந்திய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

8 முகாம்களிலுள்ளவர்களுக்கும் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் எட்டு முகாம்களிலுள்ளவர்களுக்கும் தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பதின்மூன்று முகாம்களிலுள்ளவர்களுக்கும், உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பதினெரு முகாம்களிலுள்ளவர்களுக்கும் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருபது முகாம்களிலுளளவர்களுக்கும் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 13 முகாம்களிலுள்ளவர்களுக்கும், சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 5 முகாம்களிலுள்ளவர்களுக்குமேஇந்திய நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டன.

தென்மராட்சிலுள்ள 29 முகாங்களில் 13 முகாங்களிலுள்ளவர்களுக்கே நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள முகாம்களில் இருப்பவர்களுக்கான நிவாரணப்பொருள் விநியோகம் தற்பொழுது நடைபெற்றுகொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

சூனியப் பிரதேசமாகக் காணப்படும் வடமராட்சிப் பகுதியில் இந்திய நிவாரணப் பொருள் நியோகம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் இவ்விநியோகம் குறித்து இன்று காலை யாழ் அரச அதிபரை சந்திக்கவிருக்கும் நிவாரண பொருள் விநியோகக் குழு ஆலோசனை நடத்தும் என்றும் தெரிவிக்கப்பட்டது

இந்தியநிவாரணப் பொருள் விநியோகவேலைகளில் இந்திய, இலங்கை யாழ். செஞ்சிலுவைச் சங்கம், பிரஜைகள் குழுக்கள் உதவி அரசாங்க அதிபர்கள், ப. நோ. கூட்டுறவுச்சங்கங்கள் ஆகியன ஈடுபட்டிருந்தன.

தொடர்ந்து வரவிருக்கும் இந்திய நிவாரணப் பொருள்கள் இரண்டாவது கட்டமாக இராணுவ நடவடிக்கைகளினுல் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தவர்களுக்கு விநியோகம் செய்வதற்கான ஏற்பாடுகளை யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. (வா,

# தென்னிலங்கை கிறிஸ்தவர்களின் பேச்சிற்கு வண. கஸ்பஸ் கண்டனம்

(நமது நிருபர்)

"தமிழ் ஆயர்களையும் குருக்களையும் சிங்களக்கிறிஸ்தவர்கள் பயங்கரவாதிகளுக்கு ஆதரவு கொடுக்கிறுர்கள் குற்றம் சாட்டுகிறுர்கள் என்று வண. போல் கஸ்பஸ் 'வழிகாட்டி' என்னும் கிறிஸ்தவ சஞ்சிகையொன்றிற்கு அளித்துள்ளபேட்டியோன்றில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது: 'தமிழ் ஆயர்களையும் குருக்களையும் பயங்கரவாதிகளுக்கு ஆதரவு கொடுக்கிறுர்கள் என்று சிங்களக் கிறிஸ்தவர்கள் குற்றம் சாட்டுவது தவறு. ஏனெனில் ஒரு ஆயரோ குருவோ தம்மக்களோடு வாழ்ந்து இளைஞர்களது முன்னேற்றத்திற்காக உழைத்து அவர்கள் மீது மேற்கொள்ளப்படும் இனசங்கார நடவடிக்கைகளை எதிர்த்து நீதிக்காகப் போராடுகையில் அவர்களை குற்றம்சாட்டுவது தகாது.

தென்னிலங்கைத் திருச்சபை தமிழர்களின் பிரச்னைகள் குறித்து பாராமுகமாக இருந்து வருகிறது. சிங்களக்கிறிஸ்தவர்கள் இனரீதியாக செயற்படத் தொடங்கியுள்ளார்கள்.

இலங்கைத் திருச்சபையில் இனரீதியாக தோற்றிய வேறுபாடு இன்று மிகத்தெளிவாக தெரிவதோடு அதன் விளைவுகளையும் நாம் அனுபவித்து வருகிறோம். சிங்களக் கிறிஸ்தவர்கள் தமிழர்களை எப்பொழுதும் ஒதுக்கியே வைத்துள்ளார்கள்.

கடந்த வருடம் யாழ். சம்பத்தரிசியார் கல்லூரி பரிசளிப்பு வைபவத்தில் யாழ். ஆயர் தமிழின அழிப்பை கண்டனம் செய்து உரையாற்றினர்.

அவ்வுரையினைக் கண்டனம் செய்து மிககாரசாரமாக கொழும்பு பேராயர் அறிக்கைகளை விடுத்தார். யாழ். ஆயர் முழுத்தமிழ் மக்களது இன அழிவு முறையைக் கண்டனம் செய்து அதற்கு நீதிகேட்டதைக் கண்டித்த பேராயர் இனத்துவேஷம் கொண்டுள்ளார் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள்.

தென்னிலங்கைத் திருச்சபை தமிழர்களை விலக்கி வைக்கக்கூடாது. அப்படிச் செய்துவருவது கண்டனத்திற்குரியது. தென்னிலங்கை திருச்சபையினர் தமிழர்களையும் அழைத்து ஒன்ருகவாழும் வழிகுக் இட்டுச்செலல வேண்டும்.

இலங்கையிலுள்ள இரு பெரும் இனங்களை இணைக்கின்றபாலமாக கிறிஸ்தவம் மட்டுமே விளங்குகின்றது. எனவே இரண்டு இனங்களையும் புரிந்துணர்வுடனும் சமாசத்துடனும் வாழ கிறஸ்தவம் மட்டுமே உழைக்க முடியும் ஆனுல் அதுதன் கடமையில் தவறிப்பிளவுபட்டுநிற்கின்றது. இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். (ஒ)

## நோயாளர் வெளியேற்றம்

யழ்ப்பாணம், ஞாயிறு.

வடமராசிப் பகுதியில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகளினுல் அசசம் காரணமாக மந்திகை அரசினர் வைத்தியசாலையிலிருந்து நோயாளர்கள் வெளியேறிய வண்ணமுள்ளனர். [வா]

## நிவாரணப் பொருள் நாளை கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இராணுவ நடவடிக்கைகளினுல் கட்டுவன் குரும்பசிட்டிப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த அகதிகளுக்கு நாளை திங்கட்கிழமை இந்தியநிவாரணப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த நிவாரணப் பொருள்கள் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்துக்கருகில் இயங்கிவரும் தெல்லிப்பழை ப. நோ கூ. சங்ககிளை விற்பனை நிலையம் ஒன்றில் வைத்து வழஙகப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை மயிலிட்டி வடக்கு பிரஜைகள் குழுவின் உதவியுடன் யாழ் செஞ்சிலுவைச் சங்கம் செய்துள்ளது. [வா)

## நினைவுப்பேருரை

யாழ்ப்பாணம், ஞாயிறு.

பேராசிரியர் சோ. செல்வநாயகம் நினைவுப் 'பேருரை-4' இம்மாதம் பதினைந்தாம் திகதி யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் பேராசிரியர் ஆ வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

சமஸ்கிருதத்துறை தலைவர் வி சிவசாமி "தென்னுசியக் கலை வடிவங்களில் நாட்டிய சாஸ்திரமரபு" என்னும் பொருளில் நினைவுப் பேருரை நிகழ்த்துவார்.

இவ்வைபவத்தில் திருமதி தயாநிதி செல்வநாயகம் பேராசிரியர் செல்வநாயகம் தன் வாழ்நாளில் சேகரித்த நூல்கள் அனைத்தையும் யாம். பல்கலைக்கழகத்திற்கு அன்பளிப்பு செய்வார்.

துணைவேந்தர் பேராசிரியர் சு வித்தியானந்தன் பொது நூல்களையும், பேராசிரியர் பொ. பாசுந்தரம்பிள்ளை புவியியல் நூல்களையும் பெற்று கொள்வார்கள். (ஒ)

## "பல்கலைக்கழகப் பிரச்னையில் தவறுவிடக்கூடாது"

[கொழும்பு]

'வடக்கில் இன்றிருக்கும் நம்பிக்கையற்ற நிலைமையே பல்கலைக்கழகங்களிலும் நிலவுகிறது. பல்கலைக் கழக மேல்மட்டத்திலிருந்து கீழ்மட்டம்வரை பயமும் சந்தேகமும் காணப்படுகிறது. ஆதலால் இனப் பிரச்னையில் செய்த தவறை பல்கலைக்கழகப் பிரச்னையிலும் செய்யக்கூடாது.

கலவான எம். பி. திரு. டியூ குணசேகரா, பல்கலைக்கழகப் பிரச்னைகள் பற்றி பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விசேட விவாதத்தில் பேசுகையில் தெரிவித்தார்.


## கடைசிநேர வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல பராமரிப்பில் உள்ள பொமேரியன் ஆண் நாய்க்குட்டியும் "லவ் பேட்ஸ்" கூட்டுடன் விற்பனைக்குண்டு. S. பரமானந்தம், 18/A சிவ குருநாதர் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (சி-9808)

## ராஜு ஸ்ரோர்ஸ்,

67 & 69, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

சகல விதமான எசன்ஸ் வகைகளும், சாய்ப்புச் சாமான்கள், விளையாட்டுச் சமான்கள், அலங்கார, ஆடம்பர, அன்பளிப்புப் பொருட்களும் பெற்றுக் கொள்ள நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

## ராஜு ஸ்ரோர்ஸ்,

67 & 69, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

எங்களுக்கு யாழ்ப்பாணத்திலோ, சுன்னுகத்திலோ அல்லது வேறு இடங்களிலோ கிளை ஸ்தாபனம் கிடையாது என்பதையும் வாடிக்கையாளருக்கு அறியத்தருகிறேம்' (எ- 1911)

# வடபகுதி முகாம்களில் இராணுவம்; போர்த் தளபாடங்கள் குவிப்பு

## 3வது கட்டத் தாக்குதலுக்கு முயற்சி?

யாழ்ப்பாணம், ஞாயிறு.

இராணுவத்தினர் வடபகுதியில் மூன்றாவது கட்டத் தாக்குதலுக்குத் தயாராகிவருவதாகத் தெரியவருகிறது.

இந்த இராணுவ நடவடிக்கைக்கெனக் காங்கேசன்துறை ஹாபர்வியூ ஹோட்டல் இராணுவ முகாமில் பெருந்தொகையான இராணுவத் தளபாடங்கள் குவிக்கப்பட்டு வருவதாகவும் மற்றும்பலாலி கட்டுவன், குரும்பசிட்டி, வசாவிளான் மினி முகாம்களில் பெருந்தொகையான இராணுவத்தினர் குவிக்கப்பட்டு வருவதாகவும் அறியப்படுகிறது.

இது இவ்வாறிருக்க பலாலி காங்கேசன்துறை இராணுவ முகாம்களிலிருந்து தினமும் நள்ளிரவு நேரங்களில் பாரிய ''ஷெல்'' தாக்குதல் மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி நடத்தப்பட்டுவருகின்றன. இதனால் தெல்லிப்பழை, மல்லாகம், அளவெட்டி பகுதி மக்கள் அச்சத்துடன் இரவுப் பொழுதைக்கழித்து வருகின்றனர். (வா)

## எம். ஜி. ஆரின் கொடும்பாவி எரிப்பு!

(திருமலை நிருபர்)

தமிழக முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் கொடும்பாவி ஒன்று திருகோணமலை நகரில் எரிக்கப்பட்டது.

இச்சம்பவம் நகரின மடத்தடிச்சந்தியில் பெரும்பான்மைச் சமூகத்தவர்களால் மேற்கொள்ளப்பட்டதாகவும் இக்கொடும்பாவி எரிப்பின்போது குண்டு ஒன்றும் வெடிக்கவைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## செஞ்சிலுவைச் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ் செஞ்சிலுவைச் சங்க அவசர கூட்டம் ஒன்று நாளை பிற்பகல் ஞானம்ஸ் ஹோட்டலிலுள்ள வர்த்தக சங்கக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. (வா)

## ரூ 7 கோடி செலவிட அரசு முடிவு ஊர்காவல் படைப் பிரிவுக்கு

(கொழும்பு)

தாக்குதல் சம்பவங்களின் போது பலியான இருபது ஊர்காவல் படையினருக்கு அரசு நஷ்டஈடு வழங்கவுள்ளது.

மேலும் ஊர்காவல் படையினரின் சேவைகளைப் பாராட்டி பணப் பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன.

ஊர்காவல் படையினருக்கு பணப்பரிசாக மட்டும் 43 ஆயிரம் ரூபாவை பாதுகாப்பு அமைச்சு பகிர்ந்தளித்துள்ளதாக அறியப்படுகிறது.

இதேவேளை ஊர்காவல் படைப் பிரிவினருக்கென அரசு 7 கோடி ரூபாவை செலவிடத் தீர்மானித்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

சுமார் 16 ஆயிரம் ஊர்காவல் படையினர் தற்போது அநுராதபுரம், அம்பாறை, பொலநறுவைப் பகுதிகளிலும் கிழக்கு மாகாணத்திலும் பல்வேறு பகுதிகளிலும் சேவையிலீடுபடுத்தப் பட்டுள்ளதாக தெரியவருகிறது. (எ

## 3 ராணுவம் பலி, 4 பேர் காயம்

## வாக்குவாதம் துப்பாக்கி பிரயோகத்தில் முடிந்தது

(அலுவலக நிருபர்)

மன்னார் அரசினர் ஆஸ்பத்திரிக்கருகில் சென்றிக் கடமையிலீடுபட்டுவரும் இராணுவத்தினருக்கிடையே ஏற்பட்ட தகராறு காரணமாக இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் நான்கு பேர் காயமடைந்ததாகவும் கூறப்படுகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு வழமைபோல் சென்றிக்கடமையில் பல இராணுவத்தினர் ஈடுபட்டிருந்த சமயம் இரு சிப்பாய்களுக்கிடையில் வாக்குவாதம் ஏற்பட்டதைத் தொடர்ந்து இருவரும் ஒருவரை ஒருவர் எதிர்த்து துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனராம்.

இதனால் மூன்று இராணுவத்தினர் ஸ்தலத்திலே கொல்லப்பட்டனர். என்றும் நால்வர் காயமடைந்தனர் என்றும் கூறப்படுகின்றது.

காயமடைந்த மூன்று சிப்பாய்களும் சிகிச்சைக்காக அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செலலப்பட்டதுடன் இறந்தவர்களின் சடலங்கள் அவர்களது சொந்த இருப்பிடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகவும் தெரிகின்றது.

இச்சம்பவத்தில் ஈடுபட்டதாக கருதப்படும் சிப்பாய்கள் மேலிடத்தின் உத்தரவின் பேரில் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர். [ஒ]

## மீண்டும் தேடுதல்

[கிளிநொச்சி நிருபர்]

கிளிநொச்சிப்பகுதியில் மீண்டும் இராணுவத்தினரின் தேடுதல் வேட்டைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

வட்டக்கச்சிப் பகுதியைத் திடீரென முற்றுகையிட்ட ஆயுதப்படையினர் சுமார் 25 இளைஞர்களைக் கைது செய்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

## பரு. ஹாட்லி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர் சம்பந்தமாக பட்டியல் ஒன்றை அனுப்பினால் அவர்கள் தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்தி பரீட்சை எடுப்பதற்கு ஒழுங்கு செய்யலாம் என்றும் அமைச்சர் தெரிவித்திருப்பதாகத் தெரியவருகின்றது.

வடமாகாண அதிபர்கள் சங்கப் பிரதிநிதிகள் அண்மையில் கல்வி அமைச்சரசைசந்தித்துவடமாகாணத்தில்ராணுவ நடவடிக்கைகளினால் கல்வித்துறைக்கு ஏற்பட்டுவரும் பாதிப்புகள் பற்றி எடுத்துக்கூறி மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

அப்பாவிமாணவர்கள் அவ்வப்போது கைதுசெய்யப்பட்டு பூஸாவுக்கு கொண்டு போகப்படுவது பற்றியும். இராணுவத் தாக்குதல்களினால் கல்லூரிக் கட்டிடங்கள் தகர்க்கப்பட்டதனாலும், கட்டிடங்களில் ராணுவம் நிலைகொண்டதனாலும் கல்வித்துறைக்கு ஏற்பட்டுவரும் பாதிப்புகள் பற்றியும் அவர்கள் தமது மாஜரில் அமைச்சருக்கு விரிவாகவிளக்கியுள்ளனர்.

இதில் அமைச்சரை நேரடியாகத்தலையிட்டு பாடசாலைகளிலும் சுற்றுவட்டாரங்க்ளிலும் அமைதிச்சூழ்நிலையை ஏற்படுத்தி உதவும்படியும் அவர்கள் கேட்டுள்ளனர்.

## 'ஆஸி' தேர்தலில் தொழிற் கட்சி வெற்றி

[சிட்னி]

ஆஸ்திரேலிய பொதுத் தேர்தலில் மீண்டும் திரு. பொப் ஹொப்தலைமையிலான தொழிற்கட்சி வெற்றிபெற்றுள்ளது நேற்று நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் லிபரல் கட்சி பெற்றுள்ள தோல்வியைக் அக் கட்சித் தலைவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

## மாங்காய் பறிக்க ஏறியவர் சூடுவாங்கினார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

மாவிட்டபுரம் வீமன்காமத்தில் நேற்று இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

உடுவிலைச்சேர்ந்த ஓவியம் என்றழைக்கப்படும் செல்லா இரத்தினம் (வயது 39) என்பவரே படுகாயமடைந்தவராவார்:

இவர் வீமன்காமம்பகுதியில் மாங்காய் பறிப்பதற்காக மாமரத்தில் ஏறிய சமயம் இராணுவத்தினர் இவரை நோக்கித்துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் அச்சமயம் இவர் படுகாயமடைந்தார் என்றும் இச்சம்பவம் குறித்து தெரியவருகிறது. (கு)

## வடமராட்சியில் போராளிகள் ஊடுருவாதவகையில் எதிர்த் தாக்குதலாம்!

[கொழும்பு]

இராணுவத்தினர் கைப்பற்றிய வடமராட்சிப் பகுதியில் மீண்டும் போராளிகள் ஊடுருவாத வகையில் எதிர் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கொழும்பில் அதிகாரவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை நெல்லியடி சம்பவத்திற்கு வடமராட்சிப் பகுதியில் தகுந்த பதிலடி கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளதுடன் பொலிகண்டிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கண்ணிவெடி சம்பவமொன்றில் இராணுவ தரப்பில் ஒருவர் பலியானதாகவும் ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. (எ)

## மரண அறிவித்தல்

### உரும்பராய் செல்வி விமலாம்பிகை (BABILI) சண்முகம்

உரும்பராய் கிழக்கு செல்வி விமலாம்பிகை (Babili] சண்முகம் காலமானார். அன்னார் இளைப்பாறிய Railway Head Guard திரு. க. சண்முகம் திருமதி இரத்தினம்பாள் சண்முகம் ஆகியோரின் அருமைப் புதல்வியும் நிர்மலாம்பிகை அற்புதராஜா வின் (Australia) அன்புச் சகோதரியும் திரு. தியாகராஜா அற்புதராஜாவின் [Australia) மைத்துனியுமாவார் பூதவுடல் தகனக்கிரியைக்காக 12 - 7 - 87 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து இளங்காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறோம்.

(சி 9807) தகவல்: க. சண்முகம்.

### கந்தப்பு கனகரத்தினம்

புங்குடுதீவு 12-ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட முன்னைநாள் இரத்தினபுரிப் பிரபல வர்த்தகர் கந்தப்பு கனகரத்தினம் வியாழக்கிழமை (9-7-87) கொழும்பில் காலமானார். இவர் கந்தப்பு அன்னப்பிள்ளையின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னம்பலம் - கனகம்மாவின் அன்பு மருமகனும், பத்மாசனிதேவியின் அருமைக் கணவரும், திருப்பூங்குடி V. K. ஆறுமுகம், வைத்திலிங்கம் ஆகியோரின் சகோதரரும், கலாமதி, வளர்மதி, மயூரதன் [லண்டன்), சலைமதி ஆகியோரின அன்புத் தந்தையும், ஜெனீவா ஐக்கியநாடுகள் ஒன்றியத்தைச் சேர்ந்த வன்னியசிங்கத்தின் மாமனாரும், கார்த்திக்கின் பிரிய பேரனும், இராசேந்திரம் (கொழும்பு V. S. S. M. அன் கோ) அவர்களின் சகலனும், திருஞானம் பாலசிங்கம், பொன். சுந்தரலிங்கம், சரஸ்வதிதேவி, இளங்கோ, பொன் சுபாஷ்சந்திரன் (நேர்ர்வே) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவர். ஈமக்கிரியைகள் இன்று (12-7-87) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு 77, கச்சேரி நல்லூர் வீதி இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனத்துக்காக, கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:

(சி 9805) பொன். சுந்தரலிங்கம்.

## ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இந்திய நிவாரணப்பொருள் விநியோகம் சட்பந்தமாக ஆலோசனைக் கூட்டமொன்று இன்று காலை யாழ் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ் அரசாங்க அதிபரின் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் இந்திய நிவாரணப் பொருள்விநியோக மத்திய குழு உறுப்பினர்கள் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

இவ்விடயம் தொடர்பாக உதவி அரசாங்க அதிபர்களின் கூட்டமொன்றும் யாழ். செயலகத்தில் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வா)

## நயினை நாகபூஷணி அம்மன் தேர்த்திருவிழாவுக்கு சென்ற யாத்திரிகர் மீது சோதனை

(மண்டைதீவு)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேர்த்திருவிழாவுக்குச் சென்ற வெளியிடத்து யாத்திரீகர்கள் அங்குள்ள விகாரைத்துறைமுகத்தில் இராணுவ, கடற்படை அதிகாரிகளால் சோதனையிடப்பட்டபின்னரே நயினாதீவு நாகபூஷணி இறங்குதுறையில் இறக்கஅனுமதிக்கப்பட்டனர்.

சோதனைக்குட்படுத்தப்படும் போது யாத்திரீகர்களுக்கு உதவியாக நயினை நாகவிகாரையின் பிரதமகுரு சோதனையிடும் இராணுவக் கடற்படை அதிகாரிகளின் மத்தியில் இருந்தவாறு சோதனைகளைக் கண்காணித்துக் கொண்டிருந்ததைக் காணமுடிந்தது

வழமைபோல் வெளியிடத்து யாத்திரிகர்களின் தொகை மிகக்குறைவாக இருந்தபோதும் ஆலய நிர்வாக நடவடிக்கைகளும், தொண்டர்சேவை ஏற்பாடுகளும் வழமைபோல் நடைபெற்றன. ஆலய பூசை நிகழ்ச்சிகளும் வழமைபோல இடம்பெற்றன.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு ஜூலை மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/10036/81 Eelanadu. P. O. Box 49 Telegram, Eelanadu. Telephone; — 22389, 24126.